www.tamilarangam.net

MARCH – MAY 1993

# அ ஆ இ
a aa ie

13



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

Tijdschrift voor Tamils in Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஆஇ

A AA IE

காலாண்டு இதழ்

சுவடு 13

பங்குனி - வைகாசி 1993

வெளியீடு
இலங்கைக் கலாச்சாரக் குழு
நெதர்லாந்து

முகவரி:
A AA IE
Post bus 85326
3508 A H Utrecht
Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவரமணியின்

# முனைப்பு

பேய்களால் சிதைக்கப்படும்
பிரேதத்தைப் போன்று
சிதைக்கப்பட்டேன்
ஆத்மாவின் உணர்ச்சிகள் எல்லாம்
இரத்தம் தீண்டிய கரங்களால்
அசுத்தப்படுத்தப்பட்டன
என்னை மேகத்துக்குள்ளும்
மண்ணிற்குள்ளும்
மறைக்க எண்ணிய வேளையில்
வெளிச்சம் போட்டுப் பார்த்தனர்
அவர்களின்
குரோதம் நிறைந்த பார்வையும்
வஞ்சகம் நிறைந்த சிரிப்பும்
என்னைச் சுட்டெரித்தன
எனது ஆசைகள் இலட்சியங்கள்
சிதைக்கப்பட்டன
அவர்களின் மனம்
மகிழ்ச்சி கொண்டது.
அவர்களின் பேரின்பம்
என் கண்ணீரில்தான்
இருக்க முடியும்
ஆனால் என் கண்களுக்கு
நான் அடிமையில்லை
அவர்களின் முன்
கண்ணீரைக் கொட்ட.
என் வேதனை கண்டு
ரசித்தனர் அவர்கள்
என்றைக்குமாய் என் தலை
குனிந்து போனதாய்க்
கனவு கண்டனர்
ஆனால் நான் வாழ்ந்தேன்
வாழ்நாளெல்லாம் நானாக
இருள் நிறைந்த பயங்கரங்களினூடாக
நான் வாழ்ந்தேன்
இன்னும் வாழ்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மு.நித்தியானந்தன்

# சிவரமணியும் தற்கொலையும்

## - துர்க்ஹைமிலிருந்து மாஒ வரை

இளங்கவிஞையும் பெண்நிலைவாதியுமான சிவரமணியின் மறைவு துயரந்தோய்ந்தது. அராஜகம் கோரநர்த்தனம் புரியும் ஒரு அந்தகாரவெளியில் ஒரு சின்னவிளக்கைப் பிடித்துக்கொண்டு போக முனைந்த அவர் தன்னையே அழித்துக் கொண்டு விட்டமை மனிதாபிமானம் கொண்ட எவரதும் அனுதாபத்தையும் கோருவது.

ஜேர்மனியில் ஒரு இலக்கியச் சந்திப்பில் தமிழ்ப் பெண்நிலைவாதிகள் அவரது கவிதைகளை வாசித்து அவரின் மறைவை நினைவு கூர்ந்தபோது அந்நிகழ்வை அவருடைய த்ற்கொலையை அவர்கள் ஆராதித்து மகுடம் சூட்ட முனைவதாகவும் அது வெறும் கோழைத்தனம் மட்டுமே என்றும் ஒருவர் வாதிட்டார். ஞானி நிலவைச் சுட்டிக்காட்டினால் மூடன் சுட்டுவிரலைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்கிற கூற்றுத்தான் அப்போது என் நினைவில் எழுந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சிவரமணி போன்றோரின் தற்கொலை என்பது அடிப்படையில் கோழைத் தனமானது. சிவரமணி வெறும் கவிதைகள் மட்டுமென்ற நிலையிலிருந்ததுடன், தனது அரசியல் பாதையை வகுத்துக்கொள்ளாத நிலையில் இருந்ததும் தற்கொலைக்கான காரணம் எனலாம். கலைகலைக்காக மட்டுமென்ற வாதம் உடையவர்கள் கூட சில பிரச்சினைகளைக் கண்டு அதன் மீதான வெறுப்புடன் தற்கொலையை நாடுகின்றனர். அப்பிரச்சினைகளை மாற்றத் திராணியற்ற இவர்களின் மரணம் கோழைத்தனமானது" என்று இன்னுமொரு 'காரணமன்னர்களின்' No appeal தீர்ப்பு.

ஏன் சிவரமணி எதிர் நீச்சல் போடவில்லை? என்று இன்னுமொரு கண்டனம்.

இந்த நபர்களெல்லாம் கூடிக்கூடிப் போனால் தாங்கள் எதிர்நீச்சல் போட்ட மகத்தான அனுபவத்திலிருந்து சிவரமணிக்கு யாராவது Travel Agency யின் விலாசத்தை சிபார்சு செய்திருக்கக்கூடும். அவ்வளவுதான்!

சிவரமணி என்ற முரசின் மீது தங்கள் மொன்னைக் கத்திகளைச் சுழற்றி மோதி கூச்சல் எழுப்பும் இவர்களின் வாதத்தில் ஒருவருக்கு ஆழ்ந்து கிரகித்துக்கொள்வதற்கு எதுவுமில்லை.

## <u>கிறிஸ்தவ திருச்சபைகள்</u>

தற்கொலையை அழுத்தமாகக் கண்டிப்பது மட்டுமே ஒருவரை முற்போக்கானவராக்கி விடாது. மத்தியகால கிறிஸ்தவ திருச்சபைகள் தற்கொலையை மிக மோசமாகக் கண்டனம் செய்திருக்கின்றன. ஒருவர் தன் விருப்பத்தின்படி தன் உயிரை நீக்கிக்கொள்ள முனைவது கடவுளின் ஆதிபத்திய எல்லைக்குள் அத்துமீறி நுழையும் விஷயமாகக் கருதப்பட்டு தற்கொலை செய்தவர்களுக்கு கிறிஸ்தவ மதச்சடங்கே நிராகரிக்கப்பட்டது. இன்னும் ஒருபடி மேலேபோய் தற்கொலை செய்து கொண்டவர்களின் உடல் சந்திகளில் வீசப்பட்டு கழுகுகளாலும் நாய்களாலும் குதறிச் சிதைக்கப்பட்டு நிந்தனைக்கும் அவமரியாதைக்கும் உட்படுத்தப்பட்டது. அந்த சடலங்களைப் புதைக்க அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் கூட யாருக்கும் தெரியாமல் - கிறிஸ்தவச் சடங்கு எதுவுமில்லாமல் இரவில் மட்டுமே புதைக்கவேண்டுமென்று கூறப்பட்டிருந்தது. தற்கொலை எத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட அது பாவமான காரியம்தான் என்று புனித. ஆகஸ்தின் நிராகரித்ததிலிருந்து கிறிஸ்தவ சமயம் தற்கொலையை கொலைக்குச் சமமான குற்றச் செயலாகவே கருதிச் செயற்பட்டு வந்திருக்கிறது. தற்கொலைக்கு எதிரான சட்டங்கள் 11 ம் நூற்றாண்டிலேயே இங்கிலாந்தில் நடைமுறைக்கு வந்துவிட்டது. தற்கொலை செய்பவர்களின் சொத்துகளை பறிமுதல் செய்வதோடு அவர்களுக்கு கிறிஸ்தவ சவஅடக்கமும் நிராகரிக்கப்பட்டது. 1882 ம் ஆண்டுவரை இந்த விதிகள் இங்கிலாந்தில் நடைமுறையில் இருந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறிஸ்தவ திருச்சபையும் அரசும் தற்கொலையைக் கடுமையாகக் கண்டிப்பதை எதிர்த்து வெவ்வேறு கண்ணோட்டத்திலிருந்து-அதன் சரிபிழைகள் எதுவாயினும் கியூம், மொந்தேயின், மொந்தெஸ்கியூ, வோல்தயர், ரூஸோ போன்ற அறிஞர்கள் பெருங்குரல் எழுப்பியுள்ளனர்.

ஆக, இந்த இகவாழ்வை இந்துசமயம் நிராகரித்து விடுவதால்-இந்துசமயம் "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி.....எல்லாப் பிறப்பும் பிறந்து இளைக்க வேண்டியிருப்பதால்" உயிரின் சொந்தக்காரன் வேண்டுமானால் தான் அதை நினைத்த மாத்திரத்தில் 'தட்டி'விட்டுப் போவது பற்றி சமரசம் செய்துகொண்டு விடுகிறது.

கிறிஸ்தவ சமயத்தைவிட மோசமாக திருக்குர்ஆன் தற்கொலையை கண்டனம் செய்கிறது. கொலையைவிட பாரதுாரமான குற்றச் செயலாக தற்கொலையை அது கருதுகிறது.

மத்தியகால கிறிஸ்தவ திருச்சபைக் காரர்களின் அதே குரல்கள் இப்போதும் வெவ்வேறு தளங்களிலிருந்து வெவ்வேறு காரணங்களைக் காட்டிக்கொண்டு தலையெடுப்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

*   *

<u>பிரெஞ்சு அறிஞர் துர்க்ஹைம்</u>

"நவீன சமூகவியலின் தந்தை எனப்படும் Emile Durkheim - எமில் துர்க்ஹைம் என்ற பிரெஞ்சு சமூகவியலறிஞர் நூறு ஆண்டுகளுக்கு முன் "தற்கொலை" பற்றி நடத்திய சமூகவியலாய்வு இன்றும் அத்துறையில் மகத்தான நூலாகவே கணிக்கப்படுகிறது.

துர்க்ஹைம் தற்கொலையை தனிநபர் ஒருவரின் செயற்பாடாக, தனிநபரின் உளவியல், அவரின் மனக்கிளர்ச்சிகள் சார்ந்த தனித்துவ மனோபாவம் அவரின் விஷேடகுணாம்சம், இளமைக்கால நிகழ்வுகள், அவரது Private history ஆகியவற்றால் மட்டுமே விளக்கிவிடமுடியுமென்று கருதவில்லை. அதீத தனிநபர் நடவடிக்கையாக மட்டுமே சாதாரணமாகக் கருதப்படும் தற்கொலைக்கு சமூகவியல் விளக்கம் காண முனைந்ததில்தான் துர்க்ஹைமின் ஆராய்ச்சி நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட புறக்கணிக்கப்பட முடியாத ஆராய்ச்சியாக நின்று பிடிக்க முடிந்திருக்கிறது. தற்கொலை நிகழ்ச்சியில் சமூகக்காரணிகளை முதன்முதலாக நிலைநிறுத்தியவர் துர்க்ஹைம் ஆவார்.

வெறும் தனிநபர்கள்தான் தற்கொலை செய்துகொள்கிறார்கள் எனின்

www.tamilarangam.net

ஒவ்வொரு சமுகத்திலும் ஒரு குறிக்கப்பட்ட தற்கொலை வீதம் ஏன் காணப்படுகிறது? என்று துர்க்ஹைம் கேள்வி எழுப்பினார். பல்வேறு நாடுகளின் தற்கொலை வீதம் பற்றிய புள்ளிவிபரங்களைத் திரட்டி விரிந்த ஆய்வை மேற்கொண்டார். இந்தப் புள்ளிவிபரங்கள் காட்டும் தற்கொலை வீதங்களை சமூக அமைப்பியல் சக்திகளின் ஏற்றத்தாழ்வான - அசமத்துவமான செயற்பாடுகளின் விளைவாக விளக்கப்படவேண்டிய சமூக உண்மைகளாக அவர் கண்டார். தற்கொலை வீதமானது ஒரு மெய்யான ஒழுங்குமுறை சார்ந்தும், ஒருமித்த போக்கைக் காட்டுவதும் திட்டவட்டமானதும் என்று அவர் குறிப்பிட்டார். ஒவ்வொரு சமூகமும் திட்டவட்டமான தற்கொலைக் 'கோட்டாக்களைக்' கொண்டுள்ளது என்றும் இது சமூகவியலின் விஷேச ஆய்வுக்குரியதென்றும் அவர் கருதினார்.

பல்வேறு நாடுகளினதும், ஒவ்வொரு நாட்டுக்குள்ளேயும் கூட பல்வேறு வகை சார்ந்த மக்களதும் ஒப்பீட்டு ரீதியான புள்ளிவிபரங்கள் தற்கொலை வீதங்கள் சார்பு ரீதியில் நிலையானவையாக உள்ளன என்றும் எனவே தற்கொலையை நோக்கிய ஒரு கூட்டு மனப்பாங்கு (collective tendency to suicide) ஒவ்வொரு சமூகத்திலும் நிலவுவது என்பது ஒரு சமூக உண்மை என்றும் அவர் நிறுவினார். இத்தகைய கூட்டு மனப்பாங்குகள் சில பொதுக்காரணிகளின் அடிப்படையில் பொதுவாக வகைப்படுத்தக் கூடிய தற்கொலைகளோடு தொடர்பு படுத்தக் கூடியது என்றும் அவர் கருதினார். கூடியபட்ச தனிநபர்வாதப் போக்கைத் தூண்டுகிற மைய விலகு விசைகளுக்கும் (Centrifugal forces) கூடியபட்ச சமூகத்தின் இறுக்கமான-கடுபிடியான அமுக்கங்களைக் கொண்ட மையநாட்ட விசைகளுக்கும் (Centripetal forces) இடையிலான சமத்துவமின்மைகள் என்ற கருத்தோட்டத்தின் அடிப்படையில் துர்க்ஹைம் தற்கொலைக்கு சமூகவியல் விளக்கம் கண்டார்.

இரண்டு சோடி சமத்துவமின்மை கொண்ட சக்திகளை அவர் வரையறுத்தார். ஒரு சோடி சக்திகள் ஒரு சமூகக் குழுவிற்குள் எந்த அளவிற்கு சமூக ஊடாட்டத்தையும் ஒருங்கிசைவையும் (Degree of integration or interaction in a group) கொண்டுள்ளன என்பதனைப் பொறுத்து சுயமுனைப்புத் தற்கொலைகளும் பொதுமை சார் தற்கொலைகளும் இடம் பெறுகின்றன என்றார். மற்றுமொரு சோடி சக்திகள் எந்த அளவிற்கு அறவியல் நடத்தைகளை ஒழுங்குபடுத்துகின்றன என்பதைப் பொறுத்து ஒழுங்கு பிறழ்ந்த நிலைத் தற்கொலைகளும் விதிமுனைவாதத் தற்கொலைகளும் அமைவதாக துர்க்ஹைம் கருதினார்.

சுயமுனைப்பு (-)(Egoism)

ஒழுங்கு பிறழ்ந்த நிலை(-)
(Anomie)

விதிமுனைவாதம் (+)
(Fatalism)

பொதுமை சார்பு (+)
(Altruism)

www.tamilarangam.net

சமுக ஒருங்கிணைவு (Social integration) எந்த அளவு காணப்படுகிறது என்பதைப் பொறுத்துத் தான் ஒரு சமுகக்குழு அதன் உறுப்பினர்களால் ஆஹர்சிக்கப் படுவதும், அதுபோலவே தனிநபர் நடத்தையை நெறிப்படுத்தும் ஆற்றலும் அமைகிறது. சமுக ஒருங்கிணைவு சமுக உறுப்பினர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் அதேவேளையில் அவர்கள்மீது அழுத்தங்களையும் பிரயோகிக்கிறது.

சமுகஒருங்கிணைவு வலிமையானதாக இருக்கும் போது தனிநபர்வாதப் போக்கு நசிந்துபோய் அல்லது அமுக்கப்பட்டு சமுகக்குழுவின் பொதுக்குறிக்கோள்களுக்காக தனிநபர் தன்னையே அழித்து அர்ப்பணிக்கத் தயாராகிவிடுகிறார் என்று துர்க்ஹைம் கருதினார். சமுகக்குழுவினால் பூரணமாக உள்வாங்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் தனிநபர் தன்மை (Individuality) பற்றிய குறைந்த- வளர்ச்சியுறாத மதிப்பீட்டு நிலையில் அவர் செயற்படுகிறார். சமுகக்குழுவின் நலன் கருதி அது தற்கொலையேயாயினும் தன்னை அர்ப்பணிக்கக் கோரும் அழுத்தத்தினை அவர் எளிதில் நிராகரித்துக் கொள்ள முடிவதில்லை. நவீன ராணுவத்திலும் புராதன சமுகக் குழுக்களின் மத்தியிலும் நிலவும் பொதுமைசார் தற்கொலைகளின் ஒருமித்த தன்மையினை துர்க்ஹைம் தன் நூலில் எடுத்துக்காட்டுகிறார்.

முதுமை காரணமாகவோ, நோய்வாய்ப் பட்டோ படுக்கையில் கிடந்து மரணித்தல் கௌரவக்குறைவு என்று கருதி அந்த அவமரியாதையை தவிர்த்துக் கொள்வதற்காக தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டுவிட்ட டேனிஷ் போர் வீரர்களைத் துர்க்ஹைம் தன் நூலில் மேற்கோள் காட்டுகிறார். இயற்கையாக மரணிப்பவர்கள் விஷப்பாம்புகள் நிறைந்த நரகக்குழிக்குள் என்றென்றும் கிடந்து உழலுமாறு விதிக்கப்பட்டிருப்பதாக Goths இனத்தவர்கள் நம்பினர்.

<u>வானத்துப் புதுமையல்ல</u>

இத்தகைய தற்கொலைகள் ஒன்றும் வானத்துப் புதுமையல்ல. எதிரிகளின் கைகளில் சிக்கிவிடக்கூடாது என்பதற்காக தற்கொலை நாடியவர்கள் பற்றி பைபிள் பேசுகிறது.

"அவனோ ஆண்டவர் பெயரைச் சொல்லி, என் ஆண்டவராகிய கடவுளே! என்னை நினைவு கூரும். இதோ என் இரு கண்களைப் பிடுங்கியவர்களையும் என் எதிரிகளையும் பழிவாங்கும்படி இந்த ஒருமுறை மட்டும் முன்பிருந்த வலிமையை எனக்குத் தாரும் என்று வேண்டினான். பின் அவ்வீட்டைத் தாங்கிய இரு தூண்களை வலக்கையாலும் இடக்கையாலும் பிடித்துக்கொண்டு பிலிஸ்தியரோடு நானும் சாகக்கடவேன் என்று கூறி தூண்களை வன்மையுடன் அசைக்கவே வீடு இடிந்து

www.tamilarangam.net

மக்கட் தலைவர்கள் மேலும் அங்கு இருந்த மற்றவர்கள் மேலும் விழுந்தது."- நீதிபதியாகமம்: 16 ம் அத்தியாயம் 28-30

"அப்பொழுது சாவுல் தன் பரிசேயனை நோக்கி,'அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் ஒருவேளை என்னை அவமானப் படுத்திக் கொல்லாதபடி நீயே உன் வாளை உருவி என்னை வெட்டிப்போடு' என்றார். அச்ச மிகுதியால் பரிசேயர் அதற்கு இணங்கவில்லை. ஆகையால் சாவுல் தன் வாளை தரையில் குத்தி வைத்து தாமாகவே அதன்மேல் விழுந்தார்."- முதலாம் சாமுவேல் ஆகமம்: 31 ம் அத்தியாயம் 4-6

சாம்சனும் சாவுல் மன்னனும் எதிரிகளால் தாங்கள் கைப்பற்றப் பட்டால் சித்திரவதைக்குள்ளாக்கப்படவோ அல்லது கொலைசெய்யப்படவோ கூடுமென்று கருதி தற்கொலை செய்து கொண்ட நிகழ்ச்சிகளை மேலே குறித்த வேதாகம வாசகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எதிரிகளின் கைகளில் பிடிபட்டு சித்திரவதையுற்று இரகசியங்களை வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலைகளை தவிர்த்துக் கொள்வதற்காக தங்களையே அழித்துக் கொள்பவர்களையும் எதிரணி ராணுவ முகாம்களைத் தகர்க்க தற்கொலைப் படை போல செயற்பட்டு தங்களை அழித்துக் கொள்பவர்களையும் கோழைத்தனத்தால் செயற்படுபவர்கள் என்று கூறுவது அறிவுபூர்வமானதாகாது.

சமுக அநீதிகளுக்கு எதிரான கண்டனங்களைத் தெரிவிக்கின்ற மார்க்கமாகவும் சில சந்தர்ப்பங்களில் தற்கொலைகள் அமைந்திருக்கின்றது.

தென்கொரிய அரசின் கொடூரமான தொழிலாளர் வர்க்க அடக்குமுறை நடவடிக்கைகளுக் கெதிராயும் ஆகக்குறைந்த சம்பளம், தாங்கமுடியாத கஷ்டமான வேலைநிலைமைகள் ஆகியவற்றினை எதிர்த்து தாய்-சுன் என்ற ஆடைத்தொழிலாளி தன்னையே தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டமை 1970 ல் தென்கொரிய அரசுக்கெதிரான தொழிலாளர் வர்க்க சக்திகள் அனைத்தையும் ஒன்றுதிரட்ட உதவியதில் தென்கொரிய அரசியல் எழுச்சி வரலாற்றில் மிகமுக்கிய நிகழ்ச்சியாகவே அமைந்தது.

தற்கொலை= கோழைத்தனம் என்ற குருட்டுத்தனமான சமன்பாட்டிற்கு அறிவார்த்த சர்ச்சையில் எந்தவிதஇடமுமில்லை.

வாழ்வா? சாவா?

தற்கொலை பற்றிய ஆய்வுகள் வெகுவாக முன்னேறியுள்ள போதிலும் இது குறித்த முடிவுகளை மேற்கொள்ளும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதே உசிதமானது. 1918 ல் வியன்னாவில் நடைபெற்ற தற்கொலை பற்றிய உளவியல் ஆய்வு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரங்கில் அறிஞர் சிக்மண்ட் பிராய்டு கூறிய கருத்துக்கள் இன்றும் பொருந்துவனவாகும்: "இந்தக் கலந்துரையாடலில் எத்துணை பெறுமதி மிக்க தகவல்களும் தரவுகளும் பெறப்பட்ட போதிலும் நாம் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வருவதில் வெற்றிபெறவில்லையென்றே கூறவேண்டும். நமது அனுபவங்களிலிருந்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் நாள்வரும் வரையில் இது குறித்து ஒரு அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்வதை தவிர்த்துக் கொள்வது நல்லது என்றே கருதுகிறேன்."

தற்கொலை பற்றிய நுணுகிய உளவியல் ஆய்வை மேற்கொண்ட Zilboorg என்ற அறிஞர், "விஞ்ஞானபூர்வமான அணுகுமுறையிலிருந்து தற்கொலைப் பிரச்சினை இன்னும் தீர்வு கண்டு முடிவு காணப்படாத பிரச்சினையாகவே உள்ளது என்பது மிகவும் தெளிவானதாகும். பொது உணர்ச்சியோ, Clinical Psycho pathology யோ கூட காரணபூர்வமான அல்லது திட்டவட்டமான பரிசோதனை அனுமானங்களைக் கூட முன்வைக்க முடியவில்லை" என்றார்.

நவீன அறிவியலாளர்கள் பெரும்பாலான தற்கொலை நடவடிக்கைகளில் வாழ்வைப் பேணுகின்ற அல்லது உயிர்வாழ்வைத் தக்கவைத்துக் கொள்ளுகின்ற மனப்பாங்கிற்கும் சுய அழிவைக் கோரும் போக்கிற்கும் இடையிலான உக்கிரமான மோதலின் பிரதிபலிப்பைக் காணமுடியும் என்று கருத்துத் தெரிவிக்கின்றார்கள். உண்மையில் தற்கொலை புரிபவர்கள் ஒன்றில் சாவையோ அல்லது வாழ்வையோ தான் விரும்புகிறார்கள் என்று கறாராகக் கூறிவிடுவதற்கில்லை. ஒரே நேரத்தில் அந்த இரண்டு செயற்பாடுகளையும் மேற்கொள்ள முனைகிறார்கள். சாதாரணமாக ஒன்றை மற்றதைவிட கூடுதலாக செய்துகொண்டு விடுகிறார்கள். இந்த எதிர்ப் போக்குகளில் ஒன்றைக் காட்டிலும் மற்றையது எவ்வளவு தூரம் வலிமை கொண்டதாக அமைகிறது என்பதைப் பொறுத்துத் தான் தற்கொலை நடவடிக்கைகளின் இறுதி முடிவுகள் அமைந்துவிடுகின்றன என்ற கருத்து அண்மையில் முன்வைக்கப் பட்டுள்ளது.

## ஜப்பானியத் தற்கொலைகள்

ஜப்பானைப் பொறுத்தவரையில் ஜப்பானியரின் தற்கொலை நிகழ்ச்சிகள் வேறுபட்ட விளக்கங்களை வேண்டிநிற்கிறது. ஒருவிதமான விளக்கத்தின்படி ஜப்பானியர்கள் கற்பனாலய வாழ்வில் ஊறிப்போனவர்கள். புரட்சியாளர்களைப் பொறுத்தவரையிலும் கூட மேற்கு நாடுகளைப் பொறுத்தவரையில் உயர்ந்த தர்க்கபூர்வமான அறிவு கொண்டவர்களாக காணப்படும் நேரத்தில் ஜப்பானிலோ அவர்கள் மிகுந்த கற்பனாவாதிகளாக இருக்கிறார்கள். புரட்சிகர இயக்கங்களில் ஈடுபட்ட ஜப்பானிய மாணவர் தலைவர்களின் இயல்புகளைப் பற்றி அறிஞர் Faur குறிப்பிடுவதை ஜப்பானிய தற்கொலைகள் பற்றிய ஆராய்ச்சி அறிஞர் பேராசிரியர் Mamouru Iga தன்னுடைய, "The thorn in the chrysanthemum – Suicide and Economic success in Modern Japan" என்ற நூலில் மேற்கோள் காட்டுகிறார்:

www.tamilarangam.net

"எதற்கும் அப்படியே விட்டுக்கொடுத்துக் கொண்டு போகும் போக்கிலிருந்தும் அதிகாரத்துவத்தின் முன்னால் தங்களை அப்படியே மறுதலித்து நிற்கும் நிலைமையிலிருந்தும் மக்களை மீட்டெடுக்கும் இளம் கற்பனாவாதிகளாகவே இந்த மாணவ தலைவர்கள் காணப்படுகிறார்கள். தங்களது சொந்த சாதனைகளில் இவர்கள் கேள்விக்கிடமில்லாத நம்பிக்கை கொண்டுள்ளனர். கற்பனாவாதப் புரட்சிகர அரசியலுக்கும், தீர்க்கமான எதிர்த்தாக்குதல் நடத்தும் சாகசத் தன்மையோடு கூடிய பக்கூனிய சுயஅழிப்பு போக்கிற்குமிடையில் இவர்கள் ஊசலாடிக்கொண்டிருந்தனர்."

1972 மே 20 ம் திகதி தெல்அவிவில் Lod விமான நிலையத்தின் மீது திடீர்த் தாக்குதலைக் கொண்ட ஜப்பானிய பல்கலைக்கழக மாணவன் கோஸோ ஒக்கமோட்டோ மட்டும் கைதுசெய்யப்பட அவரது இரண்டு புரட்சிகர நண்பர்களும் கிரணைட்ஸ் மூலம் தங்களையே அழித்துக்கொண்டு விட்டனர். கைதுசெய்யப்பட்ட ஒக்கமோட்டோ தனது நினைவுக் குறிப்பில் எழுதுகிறார்: " ஓர் உன்னத இலட்சியம் கருதி சாவிற்காகப் பயப்படாமல் செயற்படுவதென்பது ஜப்பானிய இனத்தில் ஊறிப்போன பண்பு."

Heizo Toriyama என்ற ஆய்வாளர் "ஏன் சாவு அஞ்சப்படுகிறது?" என்று ஜப்பானிய, ஜேர்மனிய, ஆஸ்திரிய மாணவர்கள் மத்தியில் அபிப்பிராயக் கணிப்பீட்டை மேற்கொண்டபோது சாவுக்குப் பிறகு எனது உடலுக்கு என்ன ஆகும் என்ற பயத்தை வரிசைப்படுத்தும் போது ஜப்பானிய மாணவர்கள் அதற்கு மிகக்குறைந்த இடத்தையே கொடுத்திருந்தார்கள் என்பதை விபரிக்கிறார்.

மரணத்தை இயல்பாக ஏற்றுக்கொள்கிற போக்கு ஜப்பானிய சமூகத்தில் மரணம் பற்றிய பல்வேறு கருத்தோட்டங்களால் தான் பலிதமாகியிருக்கிறது. பதினெட்டு வயதே நிறைந்த ஒரு ஜப்பானிய மாணவன் தனது தற்கொலை பற்றி எழுதிவிட்டுப் போன ஒரு குறிப்பிலிருந்து மரணம் பற்றிய ஒரு தேடலில் அவர் ஆழ்ந்து போய் இருப்பதை நாம் காணமுடியும். அந்தக் கடிதம் வருமாறு: "நான் நீண்டகாலம் வாழத்தான் விரும்பினேன். ஆனால் நான் ஏன் வாழவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. ஹைஸ்கூலில் படித்த மூன்று ஆண்டுகளிலும் நான் இதற்கு பதில் தேடிப்பார்த்தேன். ஒரு சாமானிய வாழ்க்கையை வாழ்வதென்பது மிகவும் லேசானதுதான். ....ஒரு பூனையைப் போலவோ, ஒரு பூச்சியைப் போலவோ வாழவும் முடியும்தான். துரதிஷ்டவசமாக மனிதனாகப் பிறந்துவிட்ட காரணத்தால் நான் மிகுந்த துயரத்துடன் இந்த உலகைவிட்டு போகிறேன்.

சொர்க்கத்தில் நான் சோக்கிரட்டீசைச் சந்தித்து இந்தப் பிரச்சினையைப் பற்றிக் கேட்பேன். வாழ்க்கையின் தத்துவம் தான் என்ன என்று Bergson ஐயும் Kierkegaard ஐயும் கேட்பேன். Schopenhauer ஐயும் Kant ஐயும் சந்திப்பேன். மிசாவோ

www.tamilarangam.net

பியூசி மாறாவுடன் சம்பாசிப்பேன். மனிதவாழ்க்கை என்ன என்று விளங்காமல் நீங்கள் வாழ்தல் கூடும். ஆனால் அதற்காக நீங்கள் சாகவும் செய்யலாம். நிம்மதியாக நான் சொர்க்கத்துக்கு போய் சேர்கிறேன் அங்கே எனது நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்துவேன். அங்கே என் அப்பாவுடன் சேர்ந்து சிகரட் குடிப்பேன்." இத்தகைய மரணம் பற்றிய அதீத தத்துவ விசாரணைப் போக்கு ஜப்பானிய இளைஞர்கள் மத்தியில் வேரூன்றியிருக்கிறது. ஏக தேசமாக - காலதேச வர்த்தமானங்களுக்கு அப்பால் தற்கொலையை கோழைத்தனமானது என்று நிராகரிப்பது வெறும் பாமர அபிப்பிராய உதிர்த்தல் என்ற அந்தஸ்தைப் பெறக்கூட லாயக்கற்றது.

* * *

## தற்கொலை பற்றி மாஓ

Chao– சாஓ என்ற சீனத்துப் புரட்சிகர இளம்பெண் தங்கள் பெற்றோர் பேசிய திருமணத்திற்கு உடன்படாமல் 1919 நவமபர் மாதம் தனக்கு குறிக்கப்பட்டிருந்த திருமணத்தினத்தன்று தற்கொலை செய்து கொண்டுவிட்ட சம்பவம் தலைவர் மாஓவின் நெஞ்சை உலுக்கியிருக்கிறது. மார்க்ஸியப் பேராசான் மாஓவின் ஆரம்பகால அரசியல் எழுத்துக்களில் சாஓவின் தற்கொலை முக்கிய இடத்தை வகிக்கிறது. அந்த ஆண்டின் சாங்ஷா நகரின் மிகப் பிரசித்தமான துயரக் கதையாக அமைந்துவிட்ட சாஓவின் துர்ப்பாக்கிய மரணம் குறித்து மாஓ உணர்ச்சிகரமான கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

சாஓ என்ற இளம்பெண்ணின் தற்கொலை பற்றி தலைவர் மாஓ பின்வருமாறு எழுதினார்: "ஒரு நபரின் தற்கொலை நிகழ்ச்சியை சந்தர்ப்ப சூழ்நிலைகளே முழுமையாக நிர்ணயிக்கின்றன. சாஓவின் உண்மையான நோக்கம் சாவைத் தழுவுவதுதானா? இல்லை. மாறாக அவர் வாழ்வையே நாடினார். ஆனால் அதற்குப் பதிலாக சாஓ சாவைத் தழுவிக்கொண்டிருக்கிறார் என்றால், சூழ்நிலைகள் அவரை அவ்வாறு செய்ய நிர்ப்பந்தித்தன என்பதே காரணமாகும். சாஓவினை நிர்ப்பந்தித்த சந்தர்ப்ப சூழ்நிலைகள் பின்வருவனவாகும்:

1. சீனசமுகம்
2. சாங்ஷா நகரில் நன்யாங் தெருவில் வாழ்ந்த சாஓவின் குடும்பம்.
3. சாஓ உடன்பட விரும்பாத-அவருக்கு கணவராக வரிக்கப்பட்ட சாங்ஷா நகரின் கன்சுயான் தெருவில் வாழ்ந்த வூவின் குடும்பம்.

இந்த மூன்று காரணிகளும் ஒரு முக்கோணக் கூண்டு போல மூன்று இரும்பு வலைகளாக அமைந்துள்ளன. இந்த மூன்று வலைப் பின்னல்களில் சிக்கிக் கொண்டுவிட்டபிறகு, சாத்தியமான வழிகளிலெல்லாம் அவர் வாழ்க்கைக்காக போராடியது வியர்த்தத்திலேயே முடிந்துவிட்டது. அவர் தொடர்ந்தும் வாழ்வதற்கு அவருக்கு ஒரு வழியும் தெரியவில்லை. வாழ்வின் மறுதலை மரணம். சாஓ மரணிக்க நிர்ப்பந்திக்கப் பட்டுவிட்டார். இந்த மூன்று காரணிகளில் ஏதாவது ஒன்று இரும்பு

www.tamilarangam.net

வலையாக இல்லாது போயிருந்தால் அல்லது ஏதாவது ஒரு வலையாகிலும் திறந்து விடப்பட்டிருந்தால் சாழ ஒருநாளும் மரணித்திருக்கமாட்டார். ....

நேற்றைய நிகழ்ச்சி முக்கியம் வாய்ந்தது. பேசிச் செய்கிற கல்யாணம் என்கிற வெட்கக்கேடான அமைப்பினாலும், எமது சமூக அமைப்பின் இருண்ட அமைப்பினாலும், தனிநபரது விருப்பு வெறுப்புக்களை மறுதலிக்கும் தன்மையினாலும், ஒருவர் தனது துணையைத் தானே தேடிக்கொள்கிற சுதந்திரமின்மையினாலுமே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இந்த நிகழ்வின் சகல அம்சங்களின் மீதும் இது குறித்து அக்கறை கொண்டவர்கள் தங்கள் விமர்சனங்களை முன்வைப்பதுடன் தனது சொந்தக் காதலை தானே தீர்மானிக்கும் சுதந்திரத்துக்காக ஒரு தியாகியின் மரணத்தை வரித்துக்கொண்ட இப்பெண்ணின் பெருமையைப் பாதுகாத்து நிலைநிறுத்தவும் முன்வருதல் வேண்டும்.....

தற்கொலை பற்றிய எனது கருத்து அதனை நிராகரிப்பதாகும். முதலில் மனிதனின் குறிக்கோள் வாழ்க்கையைத் தேடுதலாகும். இந்த இயற்கையான போக்கிற்கு எதிராகச் சென்று மரணத்தைத் தழுவிக் கொள்ளக் கூடாது. இரண்டாவதாக சமூகம் மக்களுக்கு எந்த நம்பிக்கையையும் வழங்காத ஒரு உண்மைநிலையிலிருந்து தான் தற்கொலை நிகழ்வுகள் இடம்பெறுகின்றன எனினும் நாம் இழந்துபோன நம்பிக்கைகளை மீட்பதற்காக சமூகத்துக்கு எதிராகப் போராடியேயாக வேண்டும். நாம் ஒரு போராட்டத்திலேயே மரணிக்க வேண்டும். மூன்றாவதாக தங்களது சொந்த வாழ்க்கைக்கு தாங்களே துணிச்சலோடு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டு விட்டவர்கள் மீது மக்கள் மரியாதை செலுத்துகிறார்கள் என்றால், அது ஒருநாளும் அவர்கள் தற்கொலையைக் கௌரவிக்கிறார்கள் என்று ஆகமாட்டாது. மாறாக தற்கொலை செய்துகொள்ள ஒருவரைத் தூண்டிய, 'காட்டுமிராண்டித்தனமான அதிகாரத்துவத்திற்கு எதிர்ப்புணர்வைக் காட்டும்' துணிச்சலான அவரின் ஆத்ம பலத்தைக் கௌரவிக்கிறார்கள் என்றே அர்த்தமாகும்.

தனது சொந்த உயிரைத் தானே எடுத்துக்கொள்வதைவிட ஒரு போராட்டத்தில் கொல்லப்படுவது எவ்வளவோ உயர்ந்ததுதான். போராட்டத்தின் குறிக்கோள் 'மற்றவர்களால் கொல்லப்படுவது' அல்ல. மாறாக 'உண்மையான ஆளுமையை நிலைநிறுத்த அவாவுதலே'யாகும். ஒரு நபர் தனது சகல முயற்சிகளாலும் இதனை அடைய முடியாது போவாரானால், சாவுடன் போராடி தன்னையே தியாகத்துக்கு அர்ப்பணிப்பாரெனில் அத்தகைய நபர் இந்த மண்ணில் வாழும் யாரைக் காட்டிலும் வீரம் மிகுந்தவராகவே ( most courageous of all on earth) திகழ்கிறார். அத்தகைய நபரின் துயரமுடிவு மக்கள் மனதில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்த வல்லது."

மாழவின் இந்த வாசகங்களுக்கு விளக்கம் தேவையில்லை. மாழ போன்ற மகத்தான புரட்சிகர மனிதாபிமானி சாழவின் தற்கொலையை மிகுந்த அனுதாபத்தோடு

www.tamilarangam.net

நோக்கி தெரிவித்துள்ள இந்தக் கருத்துக்கள் மனுக்குலத்தை நேசிக்கும் எவரது சிந்தனையிலும் ஆழ்ந்த பரிவுணர்ச்சியை ஏற்படுத்தவே செய்யும். மாஓ தற்கொலையை முதலில் நிராகரித்துவிட்டு பிறகு அவ்வாறு தற்கொலை செய்துகொண்டுவிட்ட நபர் இந்த மண்ணில் வாழும் யாரைக் காட்டிலும் வீரம் மிகுந்தவர் என்று கூறுகின்றாரே, இது இரட்டைத் தன்மையை வெளிப்படுத்தவில்லையா? என்று வாதாடுதல் சாலுமா? தற்கொலையை நிராகரித்தால் மட்டும் போதாது, அதை கோழைத்தனமானது என்றும் நிராகரிக்கவேண்டும் என்று அறிவிலிகளின் மூடத்தனம் மட்டுமே கோரமுடியும்.

## சாஓவும் சிவரமணியும்

சாஓ 74 ஆண்டுகளுக்கு முன் சீன மண்ணில் சந்திக்க நேர்ந்த அதே கொடூரமான சமூக அமைப்பு முறையையே சிவரமணியும் யாழ்ப்பாண மண்ணில் சந்திக்க நேர்ந்த கொடுமை துர்ப்பாக்கியமானது தான். யாழ்ப்பாணத்தில் கோலோச்சும் அராஜகச்சூழலுக்கு எதிராக, "ஒரு துண்டுப்பிரசுரத்தைப் போல நம்பிக்கை தரக்கூடிய வார்த்தைகள் எதுவும் என்னிடம் இல்லை" என்ற தனது பிரசித்தமான கவிதை வரிகளில் தனது எதிர்ப்புணர்வை அந்தச்சூழலில் வெளிப்படுத்திய சிவரமணி யாரைக் காட்டிலும் மிகுந்த வீரத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் என்று கொள்வதே பொருந்தும். அன்னிய மண்ணில் அல்ல, அகதிச்சூழலில் அல்ல, சொந்த மண்ணில் சோரம் போய்விட்ட விடுதலைப் போராட்டத்தின் சூழலில், "எவ்வளவோ காட்சிகள் விரிந்து கிடந்தனதான். ஆனால் அவை எல்லாமே இருண்டுபோன காட்சிகள்" என்று ராஜினி திரணகம வர்ணித்த ஒரு சூழலில், ஒரு பெண்ணின் மீதான இரட்டை ஒடுக்குமுறை மேலாண்மை புரியும் ஒரு சூழலில் தன்னை மாய்த்துக் கொள்வதன் மூலமே தனது சமூகக் கண்டனத்தை வெளியிடமுனைந்த சிவரமணி ஒரு மகத்தான தியாகியின் இடத்தை வகிக்கிறார்.

அவர் கவிதை எழுதியதை ஒரு பாவமே போன்றும் அவர் அரசியல் பாதையை வகுத்துக்கொள்ளவில்லை என்றும் பிரச்சினைகளை மாற்றத் திராணியற்ற கோழை என்றும் போலிகள் நயவஞ்சகக் கண்டனம் தெரிவிக்கிறார்கள்.

மக்கள்சீனத்தின் மகத்தான கலாச்சாரப் புரட்சியைத் தலைமை ஏற்று நடத்திய மாபெரும் புரட்சிகரத் தலைவியான சியாங் சிங் என்ற தலைவர் மாஓவின் துணைவியார் தனது 77 வயதில் தற்கொலை செய்து கொண்டு தனது சிறை வாழ்வை முடித்துக்கொண்டுவிட்ட நிகழ்ச்சியின் (1991 மே 14) மீது அவதூறு கூறுபவன் யாரோ?

"ஒரு ஜீவமரணப் பிரச்சினை பற்றி நீங்கள் இவ்வளவு அலட்சியமாக இருக்கலாமா?" என்று ஒரு சந்தர்ப்பத்தில் சியாங் சிங்கிடம் கேட்டபோது அந்தப் புரட்சிப்பெண் பின்வருமாறு கூறினார்:

www.tamilarangam.net

"I don't care. சாவு என்றால் என்ன என்று நினைக்கிறீர்கள்? நான் சாகவேண்டும் என்று எப்போதோ தீர்மானித்து விட்டேன். இப்போதெல்லாம் நான் தியாகத்தைப் பற்றித்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்."

1923 பெப்பிரவரி மாதத்தின் போது லெனின் தனது இறுதிக் காலத்தில் தாங்கமுடியாத நோயின் வேதனையால் நஞ்சு கொண்டுவந்து தருமாறு கேட்டுவிட்டார் என்பதற்காக லெனின் கோழை என்று குறை கூறக்கூடியவர் யார்?

FPL ன் தலைவராக ஒரு தசாப்த காலத்துக்கு மேல் எல் சல்வடோர் யுத்தத்தை வழிநடத்திய கெரில்லாத் தலைவர் கார்ப்பியோ 1983 ஏப்பிரல் 12 ல் தனது நெஞ்சில் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துவிட்டதற்கு கோழைத்தனம் மட்டும் விளக்கம் தந்துவிடாது.

சங்கானை சாதிப்போராட்டத்தில் மட்டக்களப்பிலிருந்து சென்று நேரடியாகக்கலந்து கொண்ட மாஓயிஸ்ட்டான கவிஞர் சுபத்திரன் தற்கொலை செய்து கொண்டு மரணித்தது அரசியல் பாதையை வகுத்துக்கொள்ளாதுவிட்ட தவறின்பாற் படுமாமோ?

* * *

## தற்கொலையும் தமிழர்களும்

சிவரமணியின் தற்கொலையினை ஒரு தனித்த நிகழ்வாகவும் கருதுவதற்கில்லை. இலங்கையின் தற்கொலையின் பின்னணியில்-அதுவும் குறிப்பாக வடமாகாண தமிழர்களின் தற்கொலை விகிதாசாரத்தின் பின்னணியில் வைத்துப் பரிசீலிப்பது இன்னும் கூடிய விளக்கத்தினை நமக்குக் கொடுக்கத் துணைபுரியும்.

### இலங்கையின் தற்கொலை,1953

மாகாணங்களும் நகரசபைகளும்

| கடலோரப்பிரதேசம் | தற்கொலைவீதம் | உள்நாட்டுப் பிரதேசம் | தற்கொலைவீதம் |
|---|---|---|---|
| கொழும்பு | 7.8 | மத்திய மாகாணம் | 6.9 |
| மேல்மாகாணம் | 8.2 | ஊவா " | 6.0 |
| தென் | 6.4 | வடமத்திய " | 7.0 |
| வடமேல் | 6.8 | இலங்கைத்தமிழர் | |
| சப்ரகமுவா" | 7.7 | வடமாகாணம் | 13.9 |
| கிழக்கு " | 6.9 | இலங்கை சராசரி | 7.7 |

www.tamilarangam.net

ஆதாரம்: "Crime and Agression in changing Ceylon- A Sociological Analysis of Homicide,Suicide and Economic Crime" by Arthur Lewis Wood(1961)

சிங்கள மக்களுடன் ஒப்பிடும் போது வடமாகாண இலங்கைத் தமிழர்கள் மத்தியில் காணப்படும் இந்த ஆகக்கூடிய தற்கொலைவீதம் 'அசாதாரணமான தற்கொலைப் பண்பு' என்றும் இது பெருமளவு கிராமியத் தோற்றப்பாடு என்றும் ஆதர் லூாயிஸ் வூட் கூறுகிறார். கலாச்சார மதிப்பீடுகள் தற்கொலை வீதத்தின் மீது செல்வாக்கைச் செலுத்த வல்லன என்று வடமாகாணத்தின் இலங்கைத் தமிழர்கள் பற்றிய தரவுகள் வலுவூட்டுவனவாக உள்ளன என்று அவர் கூறுகிறார்.

1950 ன் நடுப்பகுதியிலிருந்து 1970 ன் நடுப்பகுதி வரையிலான இரண்டு தசாப்த காலத்தில் இலங்கையின் தற்கொலை வீதமானது 3 மடங்காக அதிகரித்திருக்கிறது. 1955 ல் 6.9 ஆக இருந்த தற்கொலை வீதம் 1974 ல் 22.1 ஆக அதிகரித்திருக்கிறது. இது உலகின் ஆகக்கூடிய தற்கொலை வீதங்களில் ஒன்றாகும். இலங்கையின் தற்கொலையில் அவதானிக்கத்தக்க முக்கிய அம்சம் இளம் ஆண் பெண்கள் மத்தியில் காணப்படும் அதிகரித்த தற்கொலை நிகழ்ச்சிகளாகும். 1960 களிலிருந்து இதனை ஆழ்ந்து நோக்கினால் தற்கொலை புரிந்து கொண்டவர்களில் சரி அரைவாசிப் பேர் 15-29 வயதிற்கு இடைப்பட்டவர்களாக இருப்பது தெரியவரும். அதிலும் பெண்கள் மத்தியிலான தற்கொலைகள் ஆண்களின் தற்கொலைகளை விட கூடிய அதிகரிப்பைக் காட்டுகிறது. 1955 ல் 59 வீதமாக இருந்த இத்தற்கொலை வீதம் 1974 ல் 72 வீதமாக அதிகரித்துள்ளது. அதிலும் மாவட்டரீதியான தற்கொலை வீதங்கள் பற்றிய ஆய்வு நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய பல உண்மைகளைப் பற்றிப் பேசுகிறது.

<u>தற்கொலைவீதம்-மாவட்டரீதியாக</u>

(ஒரு லட்சத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில்)

| மாவட்டம் | 1960 | 1970 | 1974 |
|---|---|---|---|
| வவுனியா------ | 21.3 | 59.8 | 78.0 |
| யாழ்ப்பாணம்--- | 21.3 | 27.0 | 43.5 |
| பொலநறுவை--- | 31.6 | 24.6 | 43.3 |
| மன்னார்------ | 5.6 | 24.3 | 42.2 |
| மட்டக்களப்பு--- | 10.8 | 25.6 | 32.7 |
| குருநாகல்----- | 12.9 | 25.0 | 32.3 |
| நுவரெலியா---- | 5.3 | 18.4 | 30.1 |
| பதுளை------- | 15.1 | 24.9 | 28.0 |
| புத்தளம்------ | 6.4 | 25.6 | 21.3 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | |
|---|---|---|---|
| மாத்தறை----- | 8.3 | 7.5 | 14.8 |
| கொழும்பு----- | 6.7 | 9.5 | 8.9 |
| இலங்கை சராசரி | 9.9 | 19.1 | 22.1 |

ஆதாரம்: "The Spiral of Suicide and Social change in Srilanka" by Robert N.Kearney and Barbara D.Miller(1986)

1955 லிருந்து 1974 காலப்பகுதியில் தற்கொலை வீதாசாரத்தில் வவுனியா மாவட்டம் தான் தொடர்ச்சியான- நிலையான அதிகரிப்பைக் காட்டுகிறது. அதற்கு அடுத்த அதிகரிப்பைக் காட்டுவது யாழ்ப்பாண மாவட்டமாகும். ஆகக்கூடிய தற்கொலை வீதத்தைக் காட்டும் முதல் 5 மாவட்டங்களில் வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய 4 தமிழ் மாவட்டங்களும் அடங்கிவிடுகின்றன. அண்மைக்கால புள்ளிவிபரங்களையும் கணக்கிலெடுப்போமாயின் இந்தத் தற்கொலைவீதம் மிகச் சடுதியான அதிகரிப்பினை காட்டி நிற்கும் எனலாம்.

ஸ்ட்ரௌஸ் & ஸ்ட்ரௌஸ், ஆதர் லூயிஸ் லூட் ஆகிய ஆராய்ச்சியாளர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் நிலவும் மிகவும் இறுக்கமான சாதி மற்றும் இரத்த இன உறவுகள் தனிநபரினது மன அபிலாஷைகளையும் குறிக்கோள்களையும் கட்டுப்படுத்தியும் ஒடுக்கியும் விடுகின்ற போக்கினால் தான் இந்தக் கூடியபட்ச தற்கொலைவீதம் காணப்படுகிறதென்று கருத்துத் தெரிவித்துள்ளனர். இலங்கைத் தமிழர்களின் கலாச்சாரப் பண்பில் ஆத்திரம் மற்றும் உக்கிர உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு வெளிஉலகில் போதுமான-ஏற்றுக்கொள்ளத்தக்க வடிகால்கள் இல்லாமையால் இது மறுபுறத்தில் தங்கள் சுயத்துக்குள்ளேயே செயற்பட ஆரம்பித்துவிடுகிறது என்று கூறத்தோன்றுகிறது. எனினும் இலங்கைத்தமிழர்கள் மத்தியிலான இந்தக்கூடிய பட்ச தற்கொலைவீதத்தின் பின்னணியில் செயற்படும் சமூக-கலாச்சார இயக்கவியல் இன்னும் விரிந்த நுணுகிய பரிசீலனைக்குட்படுத்தப் படவேண்டியுள்ளது. "அதிகரித்துச் செல்லும் தற்கொலை வீதத்தின் பின்னணியில் செயற்படும் சமூக மாற்றம், மற்றும் சீர்குலைவுகள் போன்றனவற்றை 100 ஆண்டுகளுக்கு முன் இனம் கண்ட துர்க்ஹைமின் பார்வையில் ஆராய்ச்சிக்கு இடம் தருகின்ற ஒரு சமகால case study யாக இலங்கை முக்கியத்துவம் பெறுகிறது" என்று இலங்கையின் தற்கொலை பற்றிய அண்மைக்கால ஆய்வு ஒன்று குறிப்பிடுகிறது. இந்த ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அனைத்தும் தமிழீழ விடுதலைப் போராட்டம் கூர்மையுறத் தொடங்கிய 80 களுக்கு முற்பட்ட கால அவதானிப்புகள் என்பதை கவனத்தில் நிறுத்துவது பொருந்தும்.

இந்த விரிந்த புள்ளிவிபரங்களின் பின்னணி சிவரமணியின் மரணத்துக்கு

www.tamilarangam.net

ஆழ்ந்த பரிமாணத்தை சேர்க்கிறது. சிவரமணியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் அனைவருமே தற்கொலையை திட்டவட்டமாக நிராகரிப்பவர்களாவர்.

"எவ்வளவுதான் சர்ச்சைக்குட் படுத்தப்பட்டாலும், யார்தான் எப்படி மறுதலித்தாலும் தற்கொலை என்பது ஒவ்வொரு மனிதனதும் ஆழ்ந்த அனுதாபத்தைக் கோரிநிற்கும் மனிதவாழ்வின் ஒரு நிகழ்வாகும்." என்ற ஜேர்மனிய மகாகவிஞன் Goethe யின் வாசகங்கள் இங்கே நினைவு கூரத்தக்கது.

தற்கொலை செய்துகொண்டுவிட்டதால் மட்டும் எவ்வாறு சிவரமணி கோழையாகி விடமாட்டாரோ அதேபோல போலிகளும் போக்கிரிகளும் 'உயிர் கொண்டு' திரிவதால் மாத்திரமே வீரர்களாகிவிடப் போவதில்லை.

---

# அஆஇ

14வது இதழ்

**ஐரோப்பிய புகலிடச் சிறுகதைச் சிறப்பிதழாக வெளிவருகிறது.**

* **தேவகி இராமநாதன்**
* **ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**
* **லோகநாயகி**
* **க.கலைச்செல்வன்**
* **பொ.கருணாகரமூர்த்தி**
* **க.கலாமோகன்**
* **ந.சுசீந்திரன்**
* **சாள்ஸ்**

**ஆகிய எழுத்தாளர்களுடன் மற்றும் பலர்**

---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எதிர்காலம்

இளைய அப்துல்லாஹ்



சூரியன்
காணாமல்போன
பூமி.

வெடித்துப்
பாளமான
தரை.

சருகாகி
உதிர்ந்து
போன
கன்றுகள்.

செத்து
எலும்பாகி
கூடாகிப்போன
மனிதம்.

சுவடிக்கூடம்
மட்டும்
சுவீகரித்துக்
கொள்ளும்
எமது
தாய்மண்ணை.

## வேள்வி

காட்டு
ஐயன்
கோயிலில்
அன்னதானம்
ஆக்கி
பூசாரி வந்து
சன்னதம் ஆடி
கூரான
கத்தி
கொண்டு
பலிபீடத்தில்
வைத்து

ஆட்டை
அறுத்து.....
மறந்துபோன
காதை.

மனிதர்
வந்து
மனிதனைக்
கொணர்ந்து
பாவத்தைச்
சுமத்தி
பழியைப்
போட்டு


கத்தி தீட்டி
தலையை
வைத்து
அறுத்தெறிந்து
துரோகி.....
உறுமலோடு
வேள்வி
கொடுத்து
திருப்திப்
படுத்தினார்கள்
காட்டு....?...
ஐயனாரை.

www.tamilarangam.net

சிறுகதை

சாள்ள்

# அச்சமே முகங்களாய்



வெளியே கோவில் மணிகள் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தன. கதவு ஒட்டைகளினூடே வந்த குளிர் ¯ போர்வையை இழுத்து முற்றாய் சுற்றிக்கொள்ளத் தூண்டியது. வெளியே வாகன இரைச்சல் இல்லாமல் தெரு மிக அமைதியாய் இருந்தது. அந்த அமைதியில் பக்கத்து வீட்டுக்காரனின் TV யில் பாடல் பூசை போய்க்கொண்டிருந்தது மிகத்தெளிவாய்க் கேட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று ஞாயிற்றுக்கிழமை - ஓய்வுநாள் - நேரம் பத்தைத் தாண்டிக்கொண்டிருக்கிறது.

போர்வையை விலக்கி, களண்டுபோய்க் கிடந்த சறத்தை தூக்கிக் கட்டிக்கொண்டு, யன்னலருகேயிருந்த மேசை வரை போனேன். சிகரட் பெட்டிக்குள் எஞ்சி இருந்த இரண்டு சிகரட்டுகளில் ஒன்றை எடுத்து பற்ற வைத்து புகையிழுத்தபோது எனக்கு மிக இதமாய் இருந்தது. மேசையிலிருந்துகொண்டு யன்னலினூடே வெளியே பார்த்தேன்.

இரவு முழுவதும் கொட்டிய பனி வெண்மையாய் படர்ந்து கிடந்தது. நேற்று மொட்டையாய் நிமிர்ந்து நின்ற 'கஸ்தானியன்' மரங்கள் பனியாய்ப் பூத்து வடிந்தன. தெளிவாய் எறித்துக் கொண்டிருந்த சூரியக் கதிர்கள் பனிப் பளிங்குகளாய் மினுங்கிக்கொண்டிருந்தன.

தெருவோர நடைபாதையில் வயோதிபத் தம்பதிகள் இருவர் கைகோர்த்து ஆயாசம்தீர நடந்தனர். அவர்களது பேச்சும் மூச்சும் நீராவியாய்த் தெரிந்தது.

அவர்களின் நாய்கள் பனி கிளறி மணந்து மணந்து மூத்திரமடிக்க அலைந்தன.

பாதையில் ஒருவன் தேகாப்பியாசத்துக்காக ஓடிக்கொண்டிருந்தான்.

எப்போதும் நான் இந்த யன்னலினூடே வெளியே பார்த்து சைக்கிள் ஓடும் சிறுவர்களுக்கு கையசைத்து... ஏதேதோ பிராக்காய்ப் பார்த்து.... ஆனால் இன்று நான் ஒரு ரசிகனாய்....

எரிந்த ஆஷ்சை மேசையிலிருந்த பேப்பரில் தட்டிவிட்டு மீண்டும் வெளியே.....

எதிரே தெரிந்த அந்த பெரிய கஸ்தானியன் மரத்தில் 'சுவால்யு'க் குருவிகள் இறக்கையை சிலிர்த்து அசைந்து, அசைந்து நடுங்கிக்கொண்டிருந்தன. சூழலுக்கு மாறக்கூடிய இந்த குருவிகள் கூட குளிரில் குறாவிப்போய் இருந்தது எனக்குப் பார்க்க பாவமாக இருந்தது. சுவால்யுகள் வீட்டுக் கூரைக்கரைகளில் களிமண் கூடுகள் கட்டி வாழ்வது இந்தக்குளிர் தாங்காதுதானோ என்று எண்ணினேன். பாவம் அந்தக் கூடுகள் குலைக்கப்பட்டு; மரங்களில் குந்தியிருக்கிற சுவால்யுகள் இன்று அழிந்து கொண்டிருக்கிற பறவை இனங்களில் ஒன்று என்பதை நினைக்க எனக்கு கவலையாய் இருந்தது. அதுவும் இப்போது அகதியாய் தன் கூடுகளும், குடும்பமும், சுற்றமும் குலைக்கப்பட்ட அகதியாய் இந்த மொட்டை மரங்களில்.....என்றுதான் என்னால்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைக்க முடிந்தது. நானும் இந்தச் சுவால்புபோல் என் தேசம் கூடுகள் குடும்பம் குலைக்கப்பட்ட அகதியாய்.... அழிந்துகொண்டிருக்கும் மனித இனங்களில் ஒன்றாய்............

சிகரட் எரிந்து விரல் இடுக்கில் சூடு வைத்தது.- பதறித் தட்டிவிட்டேன். காலைக் கடன் முடித்து தேனீர் குடிக்கும் வரை உள்ளே படுத்திருந்த சிறி எழும்பவில்லை.

இரவு முழுவதும் வெறியில் அலம்பிக்கொண்டிருந்து படுத்தவன் இது வரை அமைதியாய் தூங்கிக் கொண்டிருந்தான்.

Restaurant களில் சட்டிகள் கழுவியும், சீனக் கடைகளில் முதுகு வளைய பெட்டிகள் தூக்கியும் தன் பெற்றோரையும் குடும்பத்தையும் காப்பாற்றுகின்ற வல்ல சீவன் அவன்.

கடந்த நான்கு வருடங்களாக AMSTERDAM மின் 'ட்றாம்' வண்டி ஓடும் வரையிலான ஒரு புறநகர்ப் பகுதியில் அமைந்திருந்த வீடும் - அதன் ஒரு அறையில் எனது நண்பனான சிறியும்

ஒண்டிக்கட்டைகளாய் நாம் உழைத்து உழைத்து ஒரு முடிவுமில்லாமல், முகமிழந்து ........

உலகம் பரந்து எதையோ தொலைத்து தேடுகின்ற; என் நண்பர்கள் Amsterdam வந்த போதெல்லாம்.......

விஸ்க்கியும், சிகரட்டுமாய்க் காலங்கடத்தி Amsterdam மத்திய புகையிரதநிலையத்திற்கு எதிரே நீண்டும் வளைந்தும் செல்கின்ற டச்சுச் சாம்ராட்சியங்களின் நினைவுச் சின்னங்களான கால்வாய்க்கரை எங்கும் நிமிர்ந்து நின்ற கட்டிடங்களின் கண்ணாடிகளுக்குள் சிவப்பு நீல நிற விளக்கொளிகளில் திரைச் சீலைகளை ஒதுக்கி விட்டு ஒய்யாரமாய் நிற்கின்ற - அந்தப் பெண்களும், அவர்களின் கையசைப்பும், உள்ளே புகுந்து இவர்களின் விலை பேசலும். காணததைக் கண்டதாய் - வாய் பிழந்து வீணி வடிந்து கும்மாளம் போடுகின்ற நானும் எனது நண்பர்களுமாய்..
காலம் வெகு விரைவாகவே ஓடிவிட்டது.

கைப்பைகளைப் பறிப்பதும், ஆயுதம் காட்டி மிரட்டுவதும், கார் உடைத்துத் திருடுவதும், போதைப் பொருகளின் சில்லறை விற்பனையும், பொதுவாய்ப் போன அந்தத் தெருக்களில்..... சனம் நிறைந்து வழிந்து எப்போதும் பிதுங்கிக்கொண்டிருக்கும்.

www.tamilarangam.net

கடந்த சில வருடங்களாக இந்தத் தெருக்களோடும், எனக்கும் ஒரு பிணைப்பு. மீண்டும், மீண்டும் DAM ஐச் சுற்றி புத்தகங்கள் பரிமாறுகின்ற ஒரு தொழில்....

சிறு வயதிலிருந்தே சித்திரமும், எழுத்தும் குட்டிக் குட்டிப் படிப்பித்த பிரகாசம் வாத்தியாரை கைகொடுத்த தெய்வமாய் நான் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்.

தலை மாற்றி முத்திரைகளை நுட்பமாய் வரைந்து - இலச்சனைகள் - எழுத்துக்கள் - கோடுகள் சரிவரப் பொருந்தியுள்ளதா எனப் பல முறை பார்த்து.... மேலே கவரைக் கவனமாய்க் களட்டி மீண்டும் திருத்தமாய் பொருத்தி ஒட்டி , அழுத்திக் காயவிட்டு நானும் ஒரு மிகச்சிறந்த ஓவியனாய்......அட்டைப் பட வல்லுனனாய்..

எனது ஓவியங்கள் பெயர்களை இழந்து வேறு பெயர்களில் அடக்கமாகி.....

ஐரோப்பா எங்குமிருந்து கனடாவுக்குள் போய்க் குவிந்த பலரின் முகங்கள் என்னைப் பார்த்துச் சிரித்தும் - முறாய்த்தும் - உம்மென்றும் - போனவைதான் என்பதை நினைக்க எனக்கு அடிக்கடி சிரிப்பு வரும். பிரயாணப்பயம் அப்படியே முகங்களில் அப்பிப்போய்க் கிடக்கும்.

நேற்று செய்து முடித்த அந்தப் 'பாஸ்போட்' முகங்கள் என் நினைவுக்கு வந்தன.

கதவையும், யன்னலையும் பார்த்து மூலைக் 'காப்பெற்' துண்டு ஒழுங்காகக் பொருந்தியுள்ளதா என்று கவனித்தேன். உள்ளே ஒளிந்துகிடந்த அந்த 'பாஸ்போட்டு'க்களை மேலே 'ரெலிபோன் டிரெக்ரி' அழுத்திக் கொண்டு கிடந்தது.

கருத்து சுருட்டிய முடி , அடர்ந்த புருவம், மினுக்கிய சருவமாய் 'கிளீன்சேவ்', சிரிக்கப் பயந்து சிரிக்கும் தோற்றம்.

**JADOW SURAJA** என்றொரு பெயரில்....தயாபரனோ சிவகுமாரனோ?

இப்போதும் இந்த விமான நிலையக் கெடுபிடிகளுக்குள்ளும்..... உலகம் பூராவும் பிரயாணங்கள் தொடர்கிறது.

நானும் தம்பியைக் கூப்பிட்டு கனடாவிற்கு அனுப்பலாம் என்ற நம்பிக்கைகளுடன் ....


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிக்கதவின் மணி ஒலித்தது. செட்டி வந்திருப்பான்.

கண்ணாடியினூடே வெளியே பார்த்தேன். வெள்ளை முகங்கள் இரண்டு - யார் இவர்கள்? பதட்டமாய் இருந்தது. செட்டி மாட்டுப்பட்டுட்டானோ? என்ர விஷயங்களைச் சொல்லிப் போட்டானோ ?

திறப்பதா இல்லயா? திரும்பி ஓடி திறப்புத்தேடுவதாகப் பாசங்கு செய்தேன். நெதர்லாந்தின் பொலிஸ் உளவுப் பிரிவென்றால் எனிமேல் நான் எதையும் மறைக்க முடியாது

எல்லாச் சாட்சிகளும், ரெலிபோன் ஒட்டுக் கேட்டுப் பதிந்தவைகளும், பேர்விபரங்களும், கைவிரல் அடையாளங்களும், புத்தகக்களவின் சூத்திரதாரிகளும் நீதிமன்றுக்குக் கொண்டுவரப்படுவார்கள். குறைந்தது மூன்று வருடம் - இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படலாம்......இதை எப்போதோ விட்டிருக்கலாம்.

நான் திறக்காவிட்டால் கதவு அவர்களால் திறக்கப்படும். ஒன்றும் செய்யமுடியாது திறப்பை எடுத்துப்போய்க் கதவைத் திறந்தேன்.

காலை வணக்கம் சொல்லி - தங்களை அறிமுகப்படுத்திக் கைகுலுக்கினர்.

"எந்த நாட்டிலிருந்து வந்திருக்கிறாய்?"

"தமிழன் - இலங்கையன்"

'காவற்கோபுரங்கள்' தமிழில் தலையங்கமிட்ட இரண்டு புத்தகங்களைத் தந்து தாங்கள் 'யேகோவாவின் சாட்சிகள்' என்று என்னை மதம் மாற்றுவதற்கான பிரச்சாரத்தில் வாய் ஓயாமல் பேசத் தொடங்கினர். நான் நிம்மதியாய்ப் பெருமூச்சு விட்டு.

"என் ஆண்டவரே" என்றேன்

இரண்டு புத்தகங்களையும் வேண்டிக் கொண்டு அவர்களுக்கு 'டாக்' சொல்லி திரும்பி அறைக்குப் போகும் வரை நான் பதட்டமாய் இருந்தேன்.

---

**இவ்வருடத்திற்கான புதிய சந்தாக்களை அஆஇ உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. முடிந்துபோன தங்களின் சந்தாக்களைப் புதிப்பிக்குமாறும், புதிய சந்தாதாரர்களை அறிமுகம் செய்யுமாறும் நன்றியுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் கருத்துக்கள்

மனிதர்கள்?

'அஆஇ' சூழலியல் சிறப்பிதழ் பார்த்தேன். மூன்றாம் உலகக்குடித்தொகை பற்றிய கட்டுரையும் உயிரியல் நுண்முறை பற்றிய கட்டுரையும் சிறந்த கட்டுரைகளாகும். ஆனால் சூழலியல் பற்றிய கட்டுரை எனக்கு என்னவோ அவ்வளவு உடன்பாடானதாக இல்லை. சரியாகவோ பிழையாகவோ சூழலியல் பற்றி அதிகம் கூச்சலிடுபவர்களைப்பற்றி ஒரு அவநம்பிக்கையான பார்வையைக் கொண்டிருக்கிறேன் போல் தான் தோன்றுகிறது. இவர்களெல்லாம் தாவரங்களையும் மிருகங்களையும் பற்றிக் குரல் எழுப்புபவர்களே தவிர மனிதர்களைப் பற்றியல்ல. சூழலியல் வாதிகள் உண்மையான பிரச்சினைகளைத் திசை திருப்பிக் கொண்டு போய்விடுகிறார்கள். சூழல் சுரண்டப்படுவதற்கு உரியதல்ல என்று கூறும் அதேவேளையில் மனிதன் சூழலுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்றும் கோருவதற்கில்லை. அல்லதுபோனால் நாம் பழைய-பிழைப்பு மட்டப் பொருளாதாரக் காலகட்டத்திற்குத்தான் போகவேண்டிவரும்!

P.A.சுப்பிரமணியம், டுபாய்.

நீங்களுமா?

பாரிஸ் இலக்கியச் சந்திப்பு பற்றிய குறிப்புப் பார்த்தேன். மற்றப்பத்திரிகைகள் எப்படியாவது எழுதிவிட்டுப்போகட்டும்.அஆஇ நீங்களுமா?

சிவா, நெதர்லாந்து.

குறையே!

'சித்திரத்தில் வாழ்வெழுதி' என்ற லோகிதாசனின் சிறுகதையில் நான் ஒன்றிப்போனேன். அருமை. கருத்தடையும் கருக்கலைப்பும், சீனிவாசனின் முன்மொழிவுகள், தமிழர் நோக்கில் பண்பாடும் மொழியும் என்னும் விடயதானங்கள் காத்திரமானவையாக இருந்தன. இருந்தும் உள்ளவெளிப்பாட்டுத் தடயமாய் உருவாகும் கவிதைகள் ஒன்று இரண்டைத்தவிர அஆஇ சுமப்பதில்லை என்பது என்னவோ குறையே.

இளைய அப்துல்லாஹ் அக்குறனை, இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தென் ஆபிரிக்கக் கவிதைகள் இரண்டு: தமிழில்: மணி

### சிறைவாசம்

- டெனிஸ் ப்ருட்டஸ்-

குளிர்

பிசுபிசுக்கும் சீமெந்து
நம் வெறுங்கால்களை உறுஞ்சும்

ஒழுகும் மஞ்சள் மின்குமிழ்
ஈரமான சாம்பல்நிறச் சுவரை ஒளியூட்டும்

மூன்று மணிச் சாமப் பனியில்நனைந்த
அரிந்த புல்
கரிதாய் ஒளிரும் விளிம்புகளுடன்

கொங்கிறீற் மேல் அமர்ந்தபடி
இனிப்பில்லாத களியை
நமது விரல்களால்
வாய்களுட் திணிக்கிறோம்

பின் நிமிர்ந்து உழைக்கிறோம்

வரிசையில் நிற்கிறோம்

உறுதிமிக்கோராய் நம்மை வலுவூட்டுகிறோம்
அல்லது நம் விதியிதென்று விறைத்துப்போய்
நம்மைப் பற்றிய ஒரு படிமத்தை ஏற்றுக்கொள்வோம்

தலை நரைத்த சிறை மேலதிகாரி சொல்வார்:
"இதுகளுடன் செலவிட
எனக்கு நேரமில்லை

இதுகளெல்லாம் எலிகளிலுங் கீழானதுகள்;
இதுகளைச் சுடத்தான் இயலும்"

தலைக்கு மேலாகத், தாழ்வாக
மலரும் 'தென் சிலுவை'யின் தாரகைகளின்
விசாலமான உறைந்த மினுமினுப்பு;

நமது குதிக்கால்களிலும்
மணிக்கட்டுக்களிலும் கிடந்து
நம்மைச் சோடிசேர்க்கும்
விலங்குகள் கலகலக்கும்

மினுமினுக்கும்

நாம் நகரத் தொடங்குகிறோம்
அலங்கோலமாக

www.tamilarangam.net

# துணிதுவைக்கும் பெண்ணின் பிரார்த்தனை

**ஒஸ்வால்ட் ம்புயிஸெனி ம்ட்ஷாலி**

அவளது கைகளைப் பார்
அவிந்து, முடிச்சுமுடிச்சாகத், தோல்தடித்து.
அவளது முகத்தைப் பார்
உப்புநீரில் ஊறிய பயற்றந் தோல் போல

எண்ணற்ற ஆண்டுகளாகத்
துரைத்தனத்தின் சுகபோகத்தால் அழுக்கேறிய
தன் எசமானின் துணிகளைத் துவைத்து உழைத்தாள்

உறைபனி கோலமிட்ட காலைப் பொழுதுகளில்
வெய்யில் எரித்த பிற்பகல் வேளைகளில்
அவள் முணுமுணுக்காமல் முறிந்தாள்

ஒரு நாள், அவள்
சோர்வினால் மயங்கி விழுந்தாள்
அவளது வாய் உளறலைக் கக்கும் ஒரு
நுரைக்கும் சுனையாயிற்று

"நல்ல தெய்வமே! அன்புத்தெய்வமே!
ஏன் நான் இவ்வாறு வதைபடுகிறேன்?
எத்தனை காலம் நான் வருத்தப் பட்டுள்ளேன்?
சொல்வாய் தெய்வமே, எனக்குச் சொல்வாய் தெய்வமே
என்று கத்தினாள்

"குழந்தாய்! அன்புக்குழந்தாய்,
பொன்னிழைத்த பாவத்தில் வாழ்வோர்க்காக வேதனைப்படு
ஜின் நிறைந்த கிண்ணத்தில் நீந்துவோருக்காகப் பாடுபடு"
என்பதைக் கேட்டாள்

"நன்றி தெய்வமே! நன்றி தெய்வமே,
இந்த வேலையை நான் ஏன் செய்ய வேண்டுமென
இனியொரு நாளுங் கேளேன்"

www.tamilarangam.net

# "ஆதங்காக்கா ஆதங்காக்கா, அவரைக்கண்டாச் சொல்லிடுங்கோ"

காடக்கறுப் இரவீந்திரன்.

'மீன் பாடும் தேன்நாடு' என்று அழைக்கப்படும் மட்டுநகரில் பழங்காலந் தொட்டே நாட்டுப் பாடல்கள் வழக்கிலிருந்து வந்துள்ளன. காலம் சென்ற புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் வித்துவான் வி.சீ.கந்தையா, வித்துவான் எவ்.எக்ஸ்.சீ.நடராசா, ஜனாப்.நுஹமான், திரு.செல்வராஜகோபால், கலாநிதி பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் மட்டுநகர் நாட்டுப்பாடல்கள் பற்றி விரிவாகவே எழுதியுள்ளனர்.

இந்நாட்டுப்பாடல்கள் கமக்காரர்கள் வாழும் கிராமப்புறங்களையே பின்புலமாகக் கொண்டுள்ளன. இதில் விசேடம் என்னவெனில் தமிழரும், முஸ்லீம் இனத்தவரும் ஒன்றுபட்டு சகோதரர்களாக வாழ்ந்து இப்பாடல்களைப் பாடியதற்கான ஆதாரங்களைக் காணக்கூடிதாகவுள்ளது.

இப்பாடல்கள் கிராமிய மெட்டில் கூடிய அசைவுடன் இழுத்துப் பாடுவதாகும். அப்படி பாடும் போதுதான் அவற்றின் உண்மையான ரசிப்பும் இனிமையும் தெரியும். இவற்றில் வம்புப் பாடல்களுக்கும் குறைவில்லை. இப்பாடல்களைக் கேட்கும் போது நாம் அவற்றுடன் ஒன்றிப்போவதுடன் மனதில் இனிமையும் ஏற்படும்.

இனி என் நினைவில் நிற்கும் பாடல்களையும், அவற்றின் விளக்கங்களையும் பாரப்போம்.

"ஆதம் காக்கா ஆதம் காக்கா அவரைக் கண்டாற் சொல்லிடுங்கோ
பூவரசம் கன்னியொன்று பூ மலர்ந்து போயிற்று என்று"

காக்கா = அண்ணன் பூமலர்ந்து போயிற்று = பூப்பூ அடைதல்

www.tamilarangam.net

ஒரு கிராமத்தில் வசிக்கும் குடும்பம் ஒன்றில், கணவன் நெற்செய்கைக்காக வயலுக்குச் சென்றுவிட்டார். பக்கத்துக் காணிவயல் ஆதம் காக்காவினுடையது. தன் பெண் பூப்படைந்ததை இக்குடும்பத்தலைவி தன் முஸ்லீம் சகோதரன் மூலம் கணவனுக்குச் தெரிவிக்க இந்நாட்டுப்பாடலைப் பாடுகிறாள்.

இப்பாடலுக்கு விடையாக கணவர் ஆதம் காக்கா மூலம் இப்படித் தெரிவிக்கிறான்.

"ஆடு தொடையிலே அழகான மேனியிலே
கட்டு வருத்தமென்று என் கண்மணிக்கு சொல்லிடுகா"

தன் தொடையில் கட்டு அதானால்தான் தன்னால் வரமுடியவில்லை என்று கணவன் சொல்லி அனுப்புகிறான்.

அடுத்த பாடல் ஓர் இளைஞன் பெண்ணொருத்தியிடம் வம்புக்குக் கேட்கும் வினாவையும், அதற்கு பெண் அவனுக்கு உறைக்கும்படி அளிக்கும் பதிலையும் காட்டுகிறது.

"மார்பளவு தண்ணியிலே மன்னி மன்னிப் போற பெண்ணே
உன் மார்பிலிருக்கும் மாதாளங்காய் என்ன விலை?"

"மாதாளங்காயுமில்லை, மருக்காலம் பிஞ்சுமில்லை
பாலகருக்கு பால் கொடுக்கும் பால்முலையடா சண்டாளா"

ஒரு சோடிக் காதலர்கள் தங்கள் இரகசியச் சந்திப்பைப் பற்றி இப்படிப் பாடுகின்றனர்.

"மானே மருக்கொழுந்தே மாமி பெற்ற ஓவியமே
தேனே தித்திப்பூவே செல்வத்தைக் காண்பதெப்போ?

"அத்தானே ஆருயிரே அன்புப் பெட்டகமே
*வட்டைக்கு வரும் பொழுது காத்திருப்பேன் உனக்காக"

* வயல்

"சுற்றிவர முள்வேலி சுழலவர கம்பிவேலி
எப்படி நான் வரட்டும் என் கண்மணியைக் காண்பதற்கு?"

"வேலி அரணோ வேறெந்த முள் அரணோ
காவல் அரணோ என்னை வேணுமென்ற கள்வனுக்கு"

www.tamilarangam.net

இறுதியாக ஒரு ஆணின் பாலியல் உணர்ச்சிகளை வம்பாக வெளிப்படுத்தும் பாடல் ஒன்று.

"சீறி எழும்புதுகா *சிறுவாலைப் பிக்குதுகா
ஊதி எழும்புதுகா என் உள்ளிருக்கும் சின்னத்தம்பி

* கோவணம் போன்ற உள்ஆடை

---

# 18 வது இலக்கியச்சந்திப்பு

**ஆகஸ்ட் 7 - 8, 1993**

**நெதர்லாந்து**

நெதர்லாந்தில் நடைபெறவிருக்கும் மேற்குறித்த இரண்டு நாள் இலக்கியச்சந்திப்பில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

"Illakkiya Santhippu"
Post bus 85326
3508 AH Utrecht
Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா கொழும்பில் 'தற்கொலை குண்டின்' மூலம் கடந்த மேதினத்தன்று கொல்லப்பட்டார். அதற்கு ஒருவாரத்திற்கு முன்னர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான அத்துலத்முதலியும் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டார் என்ற செய்திகளும், நாம் அறிந்த ஒன்றுதான்.

பிரேமதாசாவின் கொலையை விடுதலைப்புலிகள் செய்திருப்பதாகவே செய்திகள் குறிப்பிடுகின்றன. விடுதலைப்புலிகள் இதை மறுத்துள்ளார்கள்.

கடந்த 15 ஆண்டுகால இலங்கை அரசியலில் பிரேமதாசாவின் பங்கு மிக முக்கியமானது. யூஎன்பி அரசின் முதல் 10 ஆண்டுகளின் ஜே.ஆர் ஆட்சியில் பிரதமராகவும், பின்னர் ஜனாதிபதியாகவும் இருந்த இவர் தன்னை ஒரு 'தேசியவாதியாகவும்', 'ஏழைப்பங்காளனாகவும்' காட்டிக் கொள்ள மிகப் பிரயத்தனப் பட்டார்.

ஆனால் இவரது ஆட்சிக்காலத்தில் - தனது அரசியல் எதிரிகளையும் - பல்லாயிரக்கணக்கான JVP இளைஞர்களையும், பத்திரிகைக்காரர்களையும், 'கடத்தல்', ரயர்க்கொலை', 'காணாமல் போதல்', போன்றவை மூலம் கொன்றொழித்த ஓர் அரசியல் கொலைகாரனாகவே அறியப்பட்டவர். தன் இரகசியக் குண்டர்படைகளையும், இராணுவத்தினரையும் ஏவிவிட்டு தன் ஆட்சியைப் பாதுகாப்பதற்கான பல்லாயிரக் கணக்கில் கொலைகளைப் புரிந்த கொடிய கரங்கள் இவரது கரங்கள்.

www.tamilarangam.net

இந்தியராணுவ வெளியேற்றத்தின்போது விடுதலைப்புலிகளுக்கும் பிரேமதாசாவிற்குமான உறவில் நெருக்கமும்-ஆயுதக்கொடுப்பனவுகளும் இருந்ததாக செய்திகளும், சம்பவங்களும் குறிப்பிடுகின்றன. தொடரும் தமிழர் பிரச்சனைகளில் பேச்சுவார்த்தைக்கான பல ரகசிய தூதுகளிலும் பிரேமதாசாவும், விடுதலைப்புலிகளும் ஈடுபட்டிருந்ததாகவே செய்திகள் கூறுகின்றன. ஆனாலும் வடக்கில் இராணுவத் தாக்குதல்களும், புலிகளை ஓரங்கட்டுவதற்கான முயற்சிகளும் தொடர்ந்தவண்ணமே இருந்தன.

தென்னிலங்கையிலும் (குறிப்பாகக் கொழும்பில்), திரிகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளிலும் வசிக்கின்ற தமிழர்களும் 'பிரேமதாசா மட்டுமே தமிழர் தீர்வில் அக்கறையுள்ள மனுசன்' என்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தது மறுப்பதற்கில்லை.

அரசியல் எதிரிகளைக் கொல்லுகின்ற கொலைக்கலாச்சாரத்தில் நாடு வழிநடத்தப்படுகிறது. அரசை ஆண்டுகொண்டிருந்த பிரேமதாசாவும், படைகளும், JVP யும், விடுதலைப்புலிகளும், ஏனைய குழுக்களும் தங்களை இந்தக் குட்டையில் ஊறவைத்த மட்டைகளாகவே உள்ளார்கள். இவர்களே உருவாக்கி வழிநடத்தும் இக்கலாச்சாரத்தால் எத்தனை ஆயிரம் அப்பாவி உயிர்கள் அழிக்கப்பட்டுவிட்டன. எத்தனை ஆயிரம் குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னப் படுத்தப் பட்டுள்ளன. இலங்கை முழுவதும் அகதிகளின் கூடாரமாய், கைதிகளின் சிறைக்கூடங்களாய், அனாதைகளின் இல்லங்களாய், சீரழிந்த சமுகங்களாய் நாடு சேறடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கொலைக் கலாச்சாரத்தையும்- ஆயுதக்கலாச்சாரத்தையும், வளர்த்துவிட்ட பிரேமதாசா போன்றவர்களும், இன்னும் பலரும் கொல்லப்படுவது ஒன்றும் வருந்தப்பட வேண்டியதே இல்லை. தாமே வளர்த்துவிட்ட கொலைக் கலாச்சாரத்தினால் தாமே அழிந்துபோனார்கள். இவ்வகைச்சாவுகள் கொலைக்கலாச்சாரத்தை வளர்த்துவிட்ட எல்லாத் தலைவர்களுக்கும் பொருந்தும். இவர்கள் எப்போதும் பொதுவிடங்களுக்குப் போவதற்கோ, மக்கள்முன் தோன்றுவதற்கோ அச்சமும், பயமும் கொண்டவர்களாயும் குண்டர்களையும், பாதுகாவலர்களையும் கொண்டவர்களாயும் 'ஒரு விதத் தலைமறைவு' வாழ்வையே வாழவேண்டும். 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல எல்லோரையும் எதிரியாயும், எல்லோரும் தன்னைக் கொல்லவே காத்திருப்பதாகவும் எண்ணிக்காலம் கடத்த வேண்டியதுதான்.

இவர்கள் தாங்கள் அழிந்து போவது ஒரு புறமிருக்க-இவ்வகைத் தாக்குதல்களைக் காரணம் காட்டி பொதுமக்கள் மீது இராணுவத்தாக்குதல்களும் இனக்கலவரங்களும் தூண்டப்படுவதற்கும், சந்தேகக்கைதிகள் தொடர்வதற்கும் வழிவகுக்கும். இவ்வகைக் கொலைகள் மக்களை மேலும் ஒடுக்குவதற்கும்-தீர்வுகளைப் பின்தள்ளுவதற்கும் வழிவகுக்கும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

www.tamilarangam.net



# பிரேமதாஸா
# -ஒரு ஏகாதிபத்திய தாசன்

வி.திருநாவுக்கரசு

கொழும்பில் மேதின ஊர்வலத்தில்(1-5-93) படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பிரேமதாஸா தென் ஆசியப் பிராந்தியத்தில் ஏகாதிபத்தியத்தின் நல்ல நண்பனாயும் ஆசைநாயகனாகவும் செயற்பட்டு வந்திருக்கிறார்.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எந்த விதத்திலும் பணிந்து போகாத - விட்டுக்கொடுக்காத நபர் என்று ஒரு புறம் இவர் பிரச்சாரப் படுத்தப்பட்டாலும் மறுபுறத்தில் "மக்கள்மயமாக்கம்" என்ற பசப்பு வார்த்தை மூலம் உலகவங்கியின் தனியார் மயமாக்கத்தை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தி வந்தவரும் இவரே ஆவார்.

சம்பள உயர்வு கோரி 1980 யூலையில் மேற்கொள்ளப்பட்ட பொது வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காக ஒரு வட்சம் தொழிலாளரை ஒட்டுமொத்தமாக வேலையிலிருந்து நீக்கிய கடுமையான நடவடிக்கைக்கு பிரேமதாசாவே முக்கியமான பொறுப்பு வகிக்கிறார்.

www.tamilarangam.net

1989- 90 காலகட்டத்தில் JVP மேற்கொண்ட குருட்டாம் போக்கான நடவடிக்கைகளால் ஏற்பட்ட வசதியான சந்தர்ப்பத்தை பாவித்து 60 ஆயிரம் சிங்கள இளைஞர்களைக் கொன்றொழித்த நடவடிக்கையை பிரேமதாசா அரசாங்கமே மேற்கொண்டது. மறுபுறம் தமிழ்த்தேசியப்பிரச்சனை எந்தவித தீர்வும் காணப்படா நிலையில் வடகிழக்கே ஒரு உள் நாட்டு யுத்த நிலமை தொடர்ந்தும் தீவிரமுற்றுக் கொண்டிருக்கிறது.

பிரேமதாசா சகல அதிகாரங்களையும் தன் கைவசம் கொண்ட ஜனாதிபதியாகவே திகழ்ந்தார்; அமைச்சரவையைவிட உயர்ந்த ஸ்தானத்திலேயே அவருடைய செயலகம் திகழ்ந்தது. அவருடைய ஆட்சி ஒரு 'தனிமனிதனின் ஷோ' வாகவே இருந்தது. தனக்கு எதிரான அரசியல் நெருக்கடிகள் உருவாகும் போதெல்லாம் கீழ் இறங்கி வந்து தான் ஒரு சாமான்ய மனிதன் என்றும், படித்த உயர்குழுவினர் தன்னைக் கழுத்தறுக்கப்பார்க்கிறார்கள் என்றும் சனங்கள் மத்தியில் பிரச்சாரம் மேற் கொள்வதில் அவர் வல்லவர். ஆனால் தனியார் மயமாக்கம், சமூகச்செலவீனங்களை நீக்குதல் ஆகிய ஏகாதிபத்திய ஆணைகளை சிரமேற் கொண்டு நடைமுறைப் படுத்துவதில் ஜே.ஆர், லலித் அத்துலத்முதலி கம்பனியைக் காட்டிலும் திறமை மிக்க தரகு முதலாளிய ஏஜெண்டாகவே செயற்பட்டார். "ஆசியாவிலேயே துரிதிமான தனியார் மயமாக்கம், விரிவான தாராளமயமாக்கம் ஆகிய தனது பொருளாதாரக் கொள்கைகளில் திறமையாகச் செயற்பட்டவர்" என்று இங்கிலாந்துப் பத்திரிகைகள் அவரைச் சரியாகவே பாராட்டியுள்ளன.

தனியார் மயமாக்கற் கொள்கையினால் தேயிலை, ரப்பர்தோட்டங்களைச் சேர்ந்த 5 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். பிரேமதாசா வடகிழக்கில் மேற்கொண்ட யுத்தம் ஒரு வருடத்திற்கு மட்டும் 25பில்லியன் ரூபாய்களை வேண்டி நின்றது.இந்த யுத்தத்தில் சொத்துடமை அழிவு,அங்கவீனர்கள் என்பதை விட 50ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். 7லட்சத்துக்கு அதிகமானோர் அகதி முகாம்களில் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

பிரேமாதாசா பற்றிய இந்த சுருக்கமான ஐந்தொகைக் கணக்கிலிருந்து தனியார் மயமாக்கத்தின் நாயகனாக வர்ணிக்கப்படும் அவர் ஏழைகளின் நண்பனாக என்றுமே இருந்ததில்லை என்பதை அறியலாம். எதிர்ப்புக்களை அடக்குவதற்கும், மௌனிக்கச் செய்வதற்கும் பிரேமதாசா அரசு கையாண்ட பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு அவரே இறுதியில் இலக்காகிப் போனார். பயங்கரவாத அரசியலை ஒரு வழிமுறையாக கொள்ளும் சகலரும் கற்றுக் கொள்ளவேண்டிய பயன்மிகுந்த படிப்பினை இதுவாகும்.

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப்போராட்டம்: சில சவால்கள்

என்.சண்முகரட்ணம்

ஒடுக்கப்படும் ஒரு இனத்தின் தேசியவாதம் எப்போதுமே முற்போக்கானது தானா? ஒடுக்கப்படும் ஒரு இனத்தின் தேசியவாதமானது ஒரு எதிர்ப்பியக்கக் கோட்பாடு என்றும் ஒடுக்குகின்ற அரசின் பிற்போக்குவாத பெருந்தேசியவாதத்தின் தவிர்க்கமுடியாத பதில் விளைவே அது என்றும் எளிமையாக அர்த்தப் படுத்திக்கொண்டால் இதற்கான பதில் எந்த விதமான சந்தேகத்திற்கும் இடமில்லாத ஒரு "ஆமாம்" தான்!

அவ்வாறாயின் LTTE பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியவாதமும் முற்போக்கானது என்றும் இன்னும் சொல்லப்போனால் புரட்சிகரமானது என்றுமே கருதப்படவேண்டும். ஏனெனில், 'சுதந்திரத் தமிழீழத்துவப்படுத்தும் தமிழீழத்தாயகத்தை' உருவாக்கும் நோக்கத்தில் ஒரு சோவினிஸ யதேச்சாதிகார அரசுக்கு எதிரான ஒரு ஆயுதப் போராட்டத்தில் LTTE ஈடுபட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. எனினும், 1983 July க்குப் பிற்பட்ட அரசியல்-இராணுவ வளர்ச்சி நிலைகளை நுணுகிப் பார்த்தால் 'அரசுக்கு எதிரானது' என்ற அம்சம் அவசியமாயினும், அதுவே ஒரு இயக்கத்தை முற்போக்கானது என்று கருதுவதற்கு போதுமான நிபந்தனையாகிவிடமாட்டாது என்பதையே தெளிவுபடுத்துகிறது. ஒடுக்கப்படுவோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இயக்கங்கள் பல்வேறு வகைகளில் ஒடுக்குவோரைப் போலவே தாமும் செயற்பட்டுக் கொண்டிருப்பதற்கு சரித்திரத்தில் ஏராளமான சான்றுகள் உள்ளன. உதாரணத்திற்கு, தமது ஐதீகங்களையும் அடையாளங்களையும் குறியீடுகளையும் தெரிவுசெய்தல், சரித்திரத்தை மீளமைத்தல், தத்துவார்த்தத்தையும் சமூக, அரசியல் கட்டுப்பாட்டுச் சாதனங்களையும் நெறிப்படுத்தி உருவாக்குதல், இயக்கத்திற்குள்ளும் இயக்கங்களுக்கிடையேயும் எழும் முரண்பாடுகளை கையாளுதல் என்று பல அம்சங்களில் இதனை நோக்கலாம். தேசியவாதம் என்பது அனைத்தையும்

www.tamilarangam.net



அரவணைத்துச் செல்வது மட்டுமென்றல்ல, அது தவிர்த்துச் செல்லக்கூடிய பிரத்தியேகத்துவம் சார்ந்த ஒரு தத்துவார்த்தமுமாகும். பிராந்திய அடிப்படையில் ஒரு குறிக்கப்பட்ட ஒடுக்கப்படும் இனத்தின் தனித்துவத்தை வரையறை செய்யவும் ஸ்தாபிதம் செய்யவும் முனையும் போது காலங் காலமாக அந்தக் குறிக்கப்பட்ட இனத்துடன் சௌஜன்யமாக வாழ்ந்து வந்த பிற இனங்களை வேண்டுமென்றே தவிர்த்து விடவும் இந்த முன்னணித் தேசியத் தத்துவார்த்திகள் தயங்குவதில்லை.

ஒடுக்கப்படும் ஒரு இனத்தின் மத்தியில் ஜனரஞ்சகமாயுள்ள தேசிய தத்துவார்த்த சிந்தனையானது ஒடுக்கும் இனத்தின் தேசியவாதத்தைப் போலவே பிற்போக்காகவும் திகழமுடியும் என்பதை இதிலிருந்து நாம் அனுமானிக்க முடியும். தமிழ் ஈழத் தேசியவாதம் இன்று அத்தகைய பிற்போக்குத் தத்துவார்த்தமாக மாறியுள்ளது. 1985 ம் ஆண்டின் அனுராதபுரப் படுகொலையிலிருந்து அண்மைய மெதிரிகிரியப் படுகொலை வரையும் தமிழ்த் தீவிரவாதிகள் நடத்தியுள்ள இனப் படுகொலைகளின் பட்டியலும், மற்றும் வடகிழக்கின் தமது பாரம்பரியப் பிரதேசங்களிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றிய நிகழ்ச்சியும் தமிழீழ

www.tamilarangam.net

இராணுவவாத சோவினிஸத்தின் அபாயகரமான வெளிப்பாடுகளாகும். இன்றைய தமிழ் மக்கள் போராட்டத்தில் ஆதிக்கம் வகிக்கும் கருத்தியலானது குறுகிய தமிழ்த் தேசியவாதத்தினதும் இராணுவவாதத்தினதும் இறுக்கமான கலவையாகும். இந்தக் கருத்தியல் கலவையின் தீவிர பிரச்சாரகர்களாக LTTE யே இன்று காணப்பட்டாலும் இக்கருத்தியல் கலவை LTTE ன் ஏகபோக உரிமை என்று கருதுவது தவறானதாகும். கடந்த காலங்களில் வேறுசில குழுக்களின் நடவடிக்கைகளிலும் இத்தகைய இராணுவ வாதமும் குறுந்தமிழ் தேசியவாதமும் திட்டவட்டமாக வெளிப்பட்டுள்ளன. LTTE ன் இராணுவவாதம் என்று கூறும்போது தமிழ் வீரமரபு எதனையும் நான் கருதவில்லை. ஆனால் தமிழ் இனத்துவத்தின் கருத்தியலின் மையமான அம்சமாக இந்தத் தமிழ் வீரமரபே இன்று அமைந்துள்ளது. இங்கு இராணுவவாதம் என்று கூறும்போது அரசியல் பிரச்சினைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் இராணுவத் தீர்வுகளை கோரும் நடவடிக்கையாக பொதுவாக அறியப்பட்டுள்ள அர்த்தத்திலேயே இதனைப் பாவிக்கிறேன். இன்றைய இலங்கையில் இராணுவவாதம் என்பது அரசினதும், அரசிற்கு எதிரான வன்முறைச் சக்திகளினதும் ஏக குத்தகையாக மாறியுள்ளது. வடகிழக்கில், அப்பாவி மக்களின் மீதும் மாற்றுக் குழுக்களின் மீதும் தொடுக்கப் பட்ட-ஒழுங்குபடுத்தப் பட்ட பயங்கரவாத நடவடிக்கையின் மூலமாக இது விடுதலைக்கான அடிப்படை அரசியலை நிராகரிக்கும் ஒரு அரசியல் செய்முறையாகவும், குறிக்கப்பட்ட ஒரு அமைப்பின் அதிகாரத்துவத்தை ஸ்தாபிக்க உதவுவதாகவுமே அமைந்துள்ளது.

இத்தகைய ஒரு சூழலில் இராணுவவாதமானது ஒழுங்குபடுத்தப் பட்ட-தக்கிவைத்துக் கொள்ளப்பட்ட பயங்கரவாதமாக இருக்கும் அதே நேரத்தில் அது ஒரு கருத்தியலாகவும் அமைந்துள்ளது. தமிழ் இராணுவவாதமானது 1980 களில் உருவான ஒரு தோற்றப்பாடாக அமையும் வேளையில், குறுந்தமிழ் தேசியவாதமோ நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

வடகிழக்கில் ஆயுதப்போராட்டமானது கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடந்து கொண்டிருப்பதாகவும் ஒருவர் கூறக்கூடும். இன்று இயங்கிக்கொண்டிருக்கும் அரசியல் சக்திகளின் தன்மையினை வெளிப்படுத்தவும், இந்த சக்திகளின் இயக்கங்களின் அடிப்படையில் எதிர்காலம் பற்றிய சித்திரத்தை உருவாக்கவும் இந்த ஆயுதப் போராட்ட வரலாறு போதுமானது. LTTE தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் உண்மையான அரசாகவே விளங்குகிறது. அடாத்தான வன்முறையும் பயங்கரவாதமும் அதன் அதிகார அமைப்பின் சாதனங்களாயுள்ளன. பாசிஸ குணாம்சங்களைக் கொண்ட அதன் கருத்தியல் மேலாண்மையும் அதனோடு கூடிய மற்றுமொரு காரணமாகும். வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரின் அபிமானத்தையும் ஆதரவையும் LTTE பெற்றுள்ளது என்பதை மறுக்கமுடியாது. இந்த LTTE ன் இராணுவ அதிகாரத்துவத்திற்கும் முஸ்லிம்களுக்கு எதிரான பயங்கரவாதத்திற்கும் எதிரான பகுதியினர் அளவில் கூடிக்கொண்டு வருகிறார்கள் என்பதும் மறுக்கமுடியாத

www.tamilarangam.net

உண்மையாகும். வடகிழக்கில் LTTE ன் ஆதரவாளர்கள் எத்தனைபேர், எதிர்ப்பாளர்கள் எத்தனைபேர் என்பது பற்றிய திட்டமான மதிப்பீடுகள் எதனையும் இங்கு நாம் மேற்கொள்ளவில்லை. ஆனால் LTTE ன் அரசியல் குணாம்சத்தை விளங்கிக்கொள்வதற்கு இந்தத் தொகை விபரங்கள் அத்துணை தீர்க்கமானவை அல்ல.

வன்முறை சாதன அமைப்பைப் பொறுத்தவரையில் LTTE அரசியல் தலைமையையும் இராணுவத் தலைமையையும் ஒரு தனிநபரில் ஒருமுகப்படுத்தியுள்ள-அடிப்படையில் ஒரு இராணுவ அமைப்பாகும். தனக்கு எதிரான குழுக்களை நிர்மூலமாக்கியதன் மூலம் LTTE தமிழ்ப் பகுதிகளில் தன் மேலாதிக்கத்தை ஸ்தாபித்துக் கொண்டுவிட்டது. புலிகள் தங்களுக்கென்று சுயமான சட்டவிதிகளைக் கொண்டுள்ளனர். அவற்றை இரும்புக்கரங்கொண்டு அமுலாக்குபவர்கள். புலிகள் அமைத்துள்ள சிறைக்கூடங்களில் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் கிடந்து வதையுறுகின்றனர். இந்தச் சிறைக்கைதிகளில் மாற்று அரசியல் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள்/ஆதரவாளர்கள், ஆதரவாளர்களென சந்தேகிக்கப்படுவோர் உட்பட, புலிகளை விமர்சித்த சுயமான புத்திஜீவிகளும் அடங்குவர். விடுதலைப்புலிகள் தமிழ்ப் பகுதிகளில் மிக நுட்பமான காவல் அமைப்பைக் கொண்டுள்ளனர். தங்களது இராணுவ அமைப்பிற்குத் துணையான - ஆரம்பநிலைப்பட்ட ஒருவித அதிகார வரன் முறையை (Bureaucracy) யும் கொண்டுள்ளனர். இதன் மூலம் வரிவசூலித்தல், தங்கள் பகுதிகளிலிருந்து வெளியே செல்பவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல், சொத்து பற்றிய தகராறுகளைத் தீர்த்தல், LTTE ன் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வெளிநாட்டு - உள்நாட்டு தன்னார்வக்குழுக்களை (NGO) இயங்க அனுமதித்தல் போன்ற, தாம் வரித்துக் கொண்ட அரசாங்க நடவடிக்கைகளை அமுல் படுத்துகின்றனர்.

வடகிழக்கில் தமிழர்கள் மீதான தமது மேலாண்மையை ஸ்தாபிக்க LTTE மிகவும விரிவான கருத்தியல் சாதன அமைப்புக்களை வலுவாக உருவாக்கிக் கொண்டுள்ளது. வடகிழக்கில் பொதுசனத்தொடர்பு சாதனங்கள் அனைத்தின் மீதும் கொண்டுள்ள தங்களின் ஏகபோகத் தன்னுரிமையைப் பாவித்து, தங்களின் குறுகிய, இராணுவவாதத் தமிழீழத் தேசியவாதக் கருத்தைப் பரப்பிவருகின்றனர். இந்தப் பொதுசனத் தொடர்புச் சாதனங்களில் தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், வீடியோ/ஓடியோ கெசற்றுகள், நாடகங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியனவும் அடங்கும். இலங்கை அரசினது வன்முறை நடவடிக்கைகளாலும், தலைமை ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டுள்ள தமிழ் தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகளாலும், தங்களது இராணுவவாதத்தை நியாயப்படுத்தவும், தமிழ்மக்கள் மீதான தங்களின் தத்துவார்த்த ஆதிக்கத்தைப் பேணவும் வேண்டிய LTTE ன் பிரத்தியேகத் தேவை கருதியும் கடந்த பத்தாண்டுக் காலத்தில் தமிழ்த்தேசியவாதம் புதிய வடிவங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

LTTE பழைய குறுகிய தமிழ் தேசியவாத நிலைப்பாட்டையே கொண்டுள்ளது.

www.tamilarangam.net

அதன் தர்க்கரீதியான தீவிரப் போக்கு வடகிழக்கிலிருந்து முஸ்லிம் மக்களைப் பூரணமாக வெளியேற்றும் போக்கில் தான் போய் முடிகிறது. 1952-1972 க்கிடைப்பட்ட தமிழரசுக்கட்சிக் காலகட்டத்தில், தமிழ்த் தேசியவாதமானது வடி-கிழக்குத் தமிழர்கள் மத்தியில் இன-பிராந்திய உணர்வை உருவாக்கும் அரசியல் திட்டத்திற்கே பயன்பட்டது. தமிழரசுக் கட்சியின் தத்துவார்த்திகள் வடகிழக்குத் தமிழர்களை பொதுவான கடந்த கால வரலாற்றையும் பொதுவான எதிர்காலத்தையும் கொண்ட ஒரு இனக்கூட்டமாக உருவகித்தனர். வளர்ச்சியுற்றுக் கொண்டிருக்கும் சிங்கள பௌத்த அரசின் அச்சுறுத்தலைச் சுட்டிக்காட்டியும், வேறு எந்த இனத்துவத்தினைப் போலவே பழைய ஐதீகங்களையுமே ஆதாரமாய்க் கொண்டவர்களாய் தமிழ் இனத்துவத்தின் உள்ளார்ந்த மையங்களை நோக்கி இவர்களின் அறைகூவல் அமைந்தது. வடக்கே பருத்தித்துறையிலிருந்து கிழக்கே பொத்துவில் வரையும் மேற்கே புத்தளம் வரையுமுள்ள தொடர்ச்சியான பிரதேசப் பரப்பைத் தாயக மண்ணாகக் கொண்ட ஒரு பெரும் இனத்தினைச் சேர்ந்தவர்களாக தங்களைக் கற்பனாபூர்வமாகக் கருதிக் கொள்ளும் வகையில் தமிழர்களுக்கு "போதமூட்டும்" இவர்களின் விஸ்தாரான உளவியல் சார்ந்த அரசியல் நடவடிக்கைகள் ஐதீகங்களையும் கட்டுக்கதைகளையும் திராவிடப் புனைவுகளையுமே சார்ந்திருந்தது. முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையிலோ இவற்றுடன் ஒன்றுபடக்கூடிய அம்சங்கள் மிகமிகச் சிக்கலாகவே இருந்தன.

தமிழ்த் தேசியக்கருத்தாடலின் விதிமுறைகள் தமிழரசுக் கட்சியின் விஸ்தாரமான காலகட்டத்திலேயே வகுக்கப்பட்டுவிட்டன. எவ்வாறாயினும், தமிழரசுக் கட்சியின் தமிழ்த் தேசியவாதமானது தமிழ்ப் பாரம்பரியப் பிதேசத்தைக் கொண்ட சமஷ்டி அமைப்பை அடியொற்றியும், ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தேசிய அமைப்பாயும் பாராளுமன்ற அரசியலின் தேவைகளைக் கருத்தில் கொண்டதாயும் அமைந்திருந்தது.

இந்தக்காலகட்டத்தில் தமிழ் தேசியவாதமானது பலமான சோவினிஸக் கூறுகளைக் கொண்டிருந்த போதும் வடிவத்தில் சாத்வீகப் போக்கையே கைக்கொண்டிருந்தது. அதிலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வந்து போகிற தேர்தல் சீசனில் மட்டுமே இது சனங்கள் மத்தியில் பேசப்படும். சில சந்தர்ப்பங்களில் 1961 ம் ஆண்டின் பிரபல்யமான சத்தியாக்கிரக இயக்கம் போன்ற வெகுஜன இயக்க எழுச்சிகளும் இடம்பெற்றுள்ளன.

தமிழீழத்தின் ஆரம்ப காலகட்டத்தின் போது (1972-83) தேசியக்கருத்தாடலானது தீவிரம் பெற ஆரம்பித்தது. ஆனால் இப்போது இதன் வரன்முறைகள் சுயநிர்ணயவாதத்தை அடிப்படையாகக் கொண்டதாய் மாறிஅமைந்திருந்தது. இத்தேசியவாதம் கூர்மைப் படுத்தப் படுவதிலும், மீள்வரையறை செய்யப்படுவதிலும் தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் பெரும் பங்காற்றியுள்ளன. அதேசமயத்தில், முஸ்லிம்களை இஸ்லாமியத் தமிழர்கள் என்ற ரீதியில் தமிழீழத்திற்குள்

www.tamilarangam.net

அகவயப்படுத்தவும் அவர்கள் முயற்சித்தனர். இப்போக்கு அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டிலிருந்து எந்தவிதத்திலும் வேறுபாடானதல்ல. தமிழ் பேசும் பொதுவான பாரிய பகுப்பிற்குள் முஸ்லிம் மக்களைத் தமிழர்களுடன் இணைத்துக்கொள்ளும் அதேநேரத்தில் அவர்களைத் தவிர்க்கும் ஓரினத்தனித்துவம் சார்ந்த கருத்தியலையும் கைக்கொள்ளும் போக்கே இதுவாகும். இக்காலகட்டத்தில்தான் அரசுக்கு ஆதரவான சில தமிழ் அரசியல்வாதிகளும் நவசமசமாஜக்கட்சி உறுப்பினரும் யாழ்ப்பாணத்தில் "துரோகிகள்" எனத் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இந்தத் தனிநபர் படுகொலை மூலம் விடுக்கப்பட்ட செய்தி யாதெனில் தமிழர்கள் அனைவரும் தமிழீழக் கோரிக்கைக்கு விசுவாசமாய் இருக்கவேண்டும் என்பதாகும்.

தீவிரத் தமிழீழக் காலகட்டத்தின் போது (1983 யூலையிலிருந்து) தமிழ் சமுதாயத்தின் வீரமரபு என்பதற்கு அழுத்தம் கொடுத்து குறுகிய தமிழ்த் தேசியவாதத்தை கூர்மைப்படுத்தும் போக்கு தீவிரமுற்றது. சகல தமிழ் குழுக்களிற்குள்ளும் தமிழ் இனத்தின் ஆதிபூர்வ ஐதீகங்களையும் கட்டுக்கதைகளையும் **LTTE** தான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளது.

விடுதலைப்புலிகள் வீரயுக ஐதீகங்களையும், யுத்தக் கட்டுக்கதைகளையும், அடையாளங்களையும் புதுப்பித்து தங்களது பிரத்தியேகமான, தீவிர தமிழ்த் தேசியவாதத்திற்கு ஆதாரமான வகையில் தமிழ் இனத்துவத்தின் உள்ளார்ந்த அமசங்களுக்கு புதுப்புனைவு வழங்குவதனை நாம் காணலாம். புலிகளுக்கு இது பல விஷயங்களில் வசதியானது. புலிகள் தமது இராணுவ வலிமையை தமிழரின் வீர மரபுடன் தொடர்புபடுத்தி தாமே அதன் சரியான வாரிசுகள் என்றும் கோரினர். புலிகளின் பிரச்சாரம் அவர்களது தலைவரை ராஜராஜசோழனுடன் ஒப்பிட்டும் புலிகளின் வீரம் தமிழரின் வீரபாரம்பரியத்தினின்றும் சுவறியது என்றும் பெருமிதம் கொள்கிறது. வீரமறவர்களின் பெருமைமிகு வழித்தோன்றல் என்ற ஐதீகத்தை ஒருமுறை ஒரு தமிழ் இளைஞனை நம்பப் பண்ணிவிட்டால் பின்னர் அவர்களைத் தேர்வு செய்து, சுத்தவீரர்களாக உருவாக்கிக் கொள்வது மிகவும் எளிதாகிவிடும். இதனைச் சார்ந்த ஐதீகமும் கருத்தியலும் வேறும் பிற ஐதீகங்களுடன் சேர்ந்து விடுதலைப்புலிகளின் இராணுவவாதத்தினையும் இனத்தை தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகளையும் நியாயப் படுத்தத் துணைபுரிகிறது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பிரதேசங்களில் வாழும் தமிழர்களே அவர்களின் அடாத்தான, கருத்தியல் சார் அதிகாரப் பிரயோகத்தின் துரதிர்ஷ்டமஏன கைதிகளாகிப் போனார்கள். இவர்களில் பெரும்பாலோர் திக்பிரமை பிடித்தவர்களாய் யுத்தத்தின் மௌனித்துப் போன பார்வையாளர்களாக மாற நேர்ந்தது. அவர்களுடைய விடுதலைக்காக அவர்களின் சார்பாக விடுதலைப்புலிகளே போராடுவதாகவும் கோரலாயினர். ஆனால் விடுதலைப் புலிகளின் மாவீர சாதனைக்

www.tamilarangam.net

கொண்டாட்டங்களில் தாராளமாகக் கலந்துகொள்வதற்கும் புலிகளை வாயார வாழ்த்துவதற்கு வாயைத்திறக்கவும், துரோகிகளைத் தூற்றவும் சந்தரப்பங்கள் நிறையவே வழங்கப்பட்டன. இதே அதிகார சாதனங்களைப் பிரயோகித்தே நூற்றாண்டுகளாக தமிழர்களுடன் ஒன்றாய் இணைந்து வாழ்ந்த முஸ்லிம் மக்களை கருத்தியல் ரீதியிலும் கொடூர பலாத்கார முறையிலும் அவர்களின் தாயக மண்ணிலிருந்தே விரட்டியடிக்கவும் முடிந்தது. இந்தத் திகிலூட்டும் நாடகம் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்த விடுதலையை முற்றுமுழுவதாக நிராகரணம் செய்வதாயிருந்தது.

நமக்குப் பெரிதும் சங்கடம் தரக்கூடிய உண்மை நிலைமைகளைச் சிறிது கவனிப்போம். வடகிழக்கில் இப்போது என்ன நடந்துகொண்டிருக்கிறது என்றால் அந்தப் பிரதேசத்தின் மீதும் அங்கு வாழ்வோர் மீதும் ஏகபோக அதிகார உரிமையை யார் கொண்டிருப்பது என்று ஒடுக்குமுறைச் சக்திகளான இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் நடத்தும் இராணுவப் போட்டா போட்டி மட்டுமே. இந்தப் போட்டியில் யார் வெற்றி பெற்றாலும் மக்கள் தான் தோற்றுப் போனவர்களாவர். தமிழ் சோவினிஸம், சுத்த ராணுவவாதம் ஆகிய இரட்டைத்தீமை பயக்கும் போக்குகள் தமிழ்ஈழம் சுதந்திர சனநாயகத் தனியரசாக நிலைபெறக்கூடிய கோட்பாட்டுச் சாத்தியக்கூறையும் கூட மீட்டெடுக்கமுடியாத வகையில் அழிந்துவிட்டது. தமிழ்மக்களைப் பொறுத்தவரையில், விடுதலை என்பது தமிழர்களாகத் தாங்கள் சுயகௌரவத்தோடு வாழ்வதை மீட்பதுவும், சகலருக்கும் சமவாய்ப்புகளை வழங்கும்-அடிப்படை உரிமைகள் உத்தரவாதம் செய்யப்பட்ட அரசியல் அமைப்பில் வாழ்வதும் பங்கு கொள்வதும் என்றுதான் இன்னும் கருதப்படுகிறது. இந்த அர்த்தத்தில் விடுதலை என்பது இன்று ஜனநாயகமாக்கத்துடனும் முழு இலங்கையினதும் சமூக, பொருளாதார மாற்றத்துடனும் பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளது. இப்போதைய அவசர, அவசியத் தேவை விடுதலை என்பதன் அடிப்படை விழுமியங்களை உயர்த்திப் பிடிப்பது, பிரிவினைக்கு மாற்றான வேறு சாத்தியப்பாடுகளைப் பரிசீலனை செய்யத் துணிந்து நடவடிக்கையில் இறங்குவதுமேயாகும். தமிழ், முஸலிம், சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஜனநாயக சக்திகள் பல்லினமக்களின் ஜனநாயக மாதிரியமைப்பாக இலங்கையைப் புனரமைப்பதற்கான புதிய கருத்தாடலைத் தொடங்கியாகவேண்டும். ஜனநாயக சக்திகளை இன்று எதிர் நோக்கியிருக்கும் சரித்திரக் கடமை யாதெனில், புத்தறிவு ஊட்டும் ஒரு யுகத்தினை-சிங்கள, தமிழ் குறுங்குழுவாத சரித்திரத்தினையும் செயற்பாடுகளையும் வீசிஎறிந்துவிட்டு புதிய வரலாற்றையும் புதிய சமூகப் பிரக்ஞையையும் உருவாக்கத்தக்க புதிய யுகத்திற்குள் நுழைவதுதான்.

7

பிரிவினை கோரிக்கையை இன்னும் தக்கவைத்துக் கொண்டிருக்கும் அனுமானங்கள் புதுப்புது புனைவுகளுடன் தொடர்ந்து கொண்டிருப்பதுவும் உண்மையே. கடந்த தசாப்தத்தில் நடந்து முடிந்த கொடூரவன்முறை, மனிதநேயம் அழிந்துபோன நிலை ஆகியவற்றிலிருந்து புதிய சிந்தனைக்கான அறிகுறிகள் தென்படுவதை கூர்ந்து

www.tamilarangam.net

அவதானித்தால் காணமுடியும். இருண்ட யுத்த மேகங்களுக்கிடையிலும் ஏகபோக அதிகாரத்துவத்திற்கிடையிலும் ஒளிக்கீறு போல இலங்கை சமூகத்திற்குள்ளிருந்தே இந்த அறிகுறிகள் தென்படுகின்றன. தென்னிலங்கையில், தீவிர சிங்கள இனவாதிகள் செல்வாக்கிழந்து கொண்டு வருகிறார்கள். இதற்காக சிங்கள மேலாதிக்கவாதத்தின் ஸ்தாபனமயப்பட்ட அதிகாரம் குறைந்துவிட்டது என்று எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இங்கு குறிப்பிடத்தக்க விஷயம் யாதெனில், ஒரு தசாப்த காலகட்டத்தில் முதல் முறையாக சிங்களமக்கள் மத்தியில் அரசாங்கம் தொடர்ந்து யுத்தத்தை மேற்கொண்டிருப்பதற்கு எதிரான அதிருப்தி வெளிப்படையாக தெரிவிக்கப் பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருத்தலாகும். "தாயகத்தைப் பாதுகாக்க" ஆயுதப்படைகளில் சேருமாறு சிங்கள இளைஞர்களைக் கோரும் அரசாங்கத்தின் தேசபக்த கோரிக்கைகளுக்கு இந்த நாட்களில் எந்த ஆதரவும் கிடையாது. சிங்க மக்கள் மத்தியில் பணிபுரியும் பல மனித உரிமை இயக்கவாதிகள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவும், தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றத்தக்க அரசியல் தீர்வு முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கருதும் சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு போவதாகவே தெரிவித்துள்ளனர். தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும், தன்மானத்தோடும் சுதந்திரத்தோடும் கூடிய சமாதானத்தை நேசிக்கும் தமிழர்களின் எண்ணிக்கையும் வளர்ந்து கொண்டு செல்வதை அவதானிக்கலாம்.

இந்தப் புதிய போக்குகளிலிருந்து எழுந்துள்ள அரசியல் சவால்கள் இதுகாலவரை எதிர்நோக்காதவை. சமூகமும் பொருளாதாரமும் துரிதமாக வளர்ச்சி காணத்தக்க வகையில் பரவலாக்கப் பட்ட ஜனநாயகத்தைக் கொண்ட ஒரு ஸ்தாபன மாதிரி (Institutional Model) நமக்கு இன்றுள்ள அவசியத் தேவையாகும். ஜனநாயகத்தை நடைமுறை சாத்தியமாக்கவும், தொடர்ந்து நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும், அரசியல் அதிகாரத்தை வழங்கக் கூடியதும் தங்களின் அனுபவங்களைத் தாமே பரிபாலித்துக் கொள்ளவும் கூடிய சமுகங்களை கட்டி எழுப்பவும் பல்வகையான புதிய ஸ்தாபன அமைப்புகளின் தேவை நம்முன் உள்ளது. சமஷ்டி ஆட்சி இன்னும் பரீட்சிக்கப்பட வேண்டிய ஒன்றாகவே குறிப்பிடப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட சகல தனிநபர்களாலும் அமைப்புக்களாலும் விரிவான களத்தில் இப்பிரச்சினை இன்னும் நுணுக்கமாக பரிசீலிக்கப்பட வேண்டும். சிங்கள தேசிய தத்துவார்த்திகளால் கடந்த நான்கு தசாப்த காலமாக சமஷ்டி ஆட்சி பற்றி மிகவும் தவறாகவே சிங்களமக்கள் போதமூட்டப்பட்டு வந்துள்ளனர். சமஷ்டி ஆட்சி என்பது வட-கிழக்கு தனியே பிரிந்து போகும் என்றும், இந்தியாவுடன் அது இணைக்கப்பட்டுவிடும் என்றுமே கூறப்பட்டு வந்துள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் சிங்கள இனவாத அமைப்புகள் போதித்த குப்பை, கூளங்களை விலக்கித்தெளிவு பெற அவர்களுக்கு உதவியாக வேண்டும். அதிகாரப் பரவலாக்கம் குறித்து சாத்தியமானவற்றைக் கண்டறிய தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் புரிந்துணர்வோடு செயற்படவேண்டும். பிரதேச எல்லைகளைப்பற்றிய

www.tamilarangam.net

இறுக்கமான வரையறைகளுடன் எதனையும் ஆரம்பித்தல் அர்த்தமில்லாதது. உள்ளூர் அலகுகளை ஆதாரமாய்க் கொண்ட புனரமைப்பு மாதிரிகளே உகந்தனவாகும். வட கிழக்கில் தமிழ்,முஸ்லிம் மக்களுக்கிடையேயும்,தேசியரீதியில் இம்மூன்று சமூகத்தவருக்கிடையேயும் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் துரிதமாய் மேற்கொள்ளப்பட வேண்டும். சுயாட்சி கொண்ட பிரதேசங்களாக முழுத்தேசத்தையும் மீளப் புனரமைக்கும் பரந்த செயற்பாட்டின் ஒரு அம்சமாகவே சமஷ்டி நோக்கப்பட வேண்டும். சிங்களப் பகுதிகளையும் தமிழ்ப் பகுதிகளையும் இரண்டு பாரிய சுயாட்சியோடு கூடிய அரசியல் அமைப்புக்களாக பிரிப்பதுதான் தீர்வு என்ற முறையில் எமது மாதிரி அமைய முடியாது. மாறாக, மிகவும் நவமான-கூடிய அதிகாரப்பரவலாக்கம், துரித அபிவிருத்தி, மக்களின் உரிமைகளையும் திறமைகளையும் எய்தும் சாத்தியங்களை வளர்த்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கக்கூடிய சமஷ்டி அமைப்பை உருவாக்கக்கூடிய சிறுசிறு - நடைமுறை சாத்தியமான பிரதேச அலகுகளைக் கட்டி எழுப்புவதை அனுமதிக்கக் கூடிய ஒரு மாதிரியே தேவை.

பல்லின மக்களைக் கொண்ட இலங்கை புதிய அடையாளத்தை, புதிய பிரக்ஞையை, புதிய குறியீடுகளை வேண்டி நிற்கிறது. உதாரணமாக, சிங்கக்கொடி பல்லின சமூகத்தின் ஒரு குறியீடாகக் கருதமுடியாது. முன்னாள் சோவியத்யூனியன் இன்று தேசிய அரசுகளாகப் பிரிந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலிலும், உலகெங்கும் இனம் சார் தேசியவாதம் எழுச்சியுற்றுக்கொண்டிருக்கும் இன்றைய நிலையில் இது மிகவும் இலட்சியபூர்வமானதாய் தோன்றக்கூடும். எங்களுடைய நிலைமையைப் பொறுத்தவரையில், இனம் சார் தேசியவாதத்தின் சகல சீரழிவுகளையும், அப்போக்கின் வரையறைகளையும் அநுபவரீதியாகக் கண்டறிந்ததிலிருந்து நடைமுறை சாத்தியமான அரசியல் பொருளாதார, கலாச்சாரத் தேவையாக பல்லினமக்களைக் கொண்ட இலங்கையைப் புனரமைக்கும் கருத்தோட்டத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறோம். சிங்கள இனம் சார் தேசியவாதத்தின் பிரிவினைப் போக்குச் செயற்பாடுகளின் விளைவுதான் தமிழீழக் கோஷம் என்பது உணரப்படுமானால், கடந்த ஒரு தசாப்த காலகட்டத்தில் நாம் எவ்வளவு தூரம்தான் போக முடியும் என்பதை மிகத் தெளிவாகவே வெளிப்படுத்திக் கொண்டுவிட்ட சிங்கள, தமிழ் தேசியவாதச் செயற்பாடுகளின் விளைவுதான் இன்று பல்லின மக்கள் வாழும் தேசமாக இலங்கையை நோக்குவதில் ஏற்பட்டுள்ள புதிய அக்கறையாகும். இந்த இரண்டு தேசியவாதங்களாலும் முழுச் சமூகமுமே காட்டுமிராண்டித்தனமான வன்முறையில் தோய்த்து எடுக்கப்பட்டுவிட்டது. இத்தேசியவாதங்களின் மூர்க்கமான பிரச்சாரகர்கள் மக்களை என்றென்றைக்கும் ஒடுக்குமுறைக்குள்ளும் அந்தகாரத்திற்குள்ளுமே வைத்திருக்கக் கங்கணம் கட்டிக்கொண்டவர்கள் போலவே செயற்பட்டனர்.

சிங்கள தமிழ் தேசியவாதங்களால் மறுதலிக்கப்பட்டுவிட்ட 'விடுதலையை' நோக்கிய நமது புதிய அரசியல் செயற்பாட்டிற்கான தேடுதலில் பல்லின மக்கள் சார்ந்த மாற்றீடுகளின் திசையை நோக்கயே நாம் பார்வையைச் செலுத்த வேண்டியுள்ளது.

நன்றி: TAMIL TIMES




சிறுவர்களின் உழைப்பைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை அமெரிக்க அரசாங்கம் சட்டரீதியாகத் தடை செய்திருப்பதையிட்டு பங்களாதேஷ் பெரும் அதிர்ச்சியடைந்திருக்கிறது.

தொழில் மயமாக்கப்பட்ட ஒரு நாடு மூன்றாம் உலகநாடு ஒன்றில் சிறுவர்களின் உழைப்பைப் பயன்படுத்துவதற்கு எதிராக சட்டத்தை இயற்றுவது எந்தவிதத்தில் மனிதாபிமானது என்பது ஓர் கேள்விக்குறியாகும்.

அமெரிக்க செனட்டர் ரொம் கார்க்கின் 08.08.92 ல் அமெரிக்கக் காங்கிரஸில் "சிறுவர்களைக் கொண்டு வேலை செய்வதற்கு எதிரான அச்சுறுத்தல் – 1992" என்ற பிரேரணையைக் கொண்டுவந்தார். இதன் அடிப்படை அம்சம் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் உழைப்பைப் பயன்படுத்தும் வெளிநாட்டுக் கம்பெனிகளின் உற்பத்திப் பொருட்களை அமெரிக்காவினுள் இறக்குமதி செய்வதைத் தடைசெய்தலாகும். இதே செனட்டர் கார்க்கின் மற்றைய மேற்கத்தைய நாடுகளிலும் இதே போன்ற ஓர் தடையை அமுல்படுத்துவதற்கு அமெரிக்க அரசாங்கம் நெருக்குதலைக் கொடுக்க

www.tamilarangam.net

வேண்டும் என கோரிக்கை விடுத்தார். மேலோட்டமாகப் பார்க்கும்போது மனிதாபிமானமாகத் தோன்றும் இச்சட்டத்தை அமெரிக்க செனட் ஏற்றுக்கொள்ளுமுன்னர், தெற்காசிய நாடொன்றான, பங்களாதேஷில் இது பயங்கர பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

பங்களாதேஷின் புடவைப் பகுதியைப் பொறுத்தவரை ஏற்றுமதியே அதன் முக்கிய அம்சம் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அந்த ஏற்றுமதியில் 50-52 % அமெரிக்கச் சந்தையிலேயே தங்கியுள்ளது. இத்தொழிற்சாலைகளில் சிறார்களின் உழைப்பைப் பயன்படுத்துதல், மற்றும் அவர்கள் கொடூரமான சுரண்டல்களுக்கு ஆளாயிருப்பது என்பன ஒன்றும் இரகசியமல்ல. ஆறு அல்லது ஏழு வயதுகளிலேயே பிள்ளைகளை இத்தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தி மாதமொன்றுக்கு f 10 ஐ அடையாளச் சம்பளமாகக் கொடுப்பார்கள். இவர்களில் வயதுகூடிய பிள்ளைகளுக்கு சிறிதளவு அதிகம் கொடுத்தாலும் அதுவும் ஓர் பட்டினிச் சம்பளமாகவும் அடிமைத் தொழிலாகவுமே காணப்படுகிறது.

"மொகமட்" என்னும் 14 வயதுச் சிறுவனுக்கு ஒரு மாதத்திற்கு...100 மணித்தியாலங்கள் மேலதிக வேலை செய்தபின்பு, f 50 சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. இவருக்கு பாடசாலைக்குச் செல்வதற்கு ஒரு சந்தர்ப்பமும் இல்லை. அவரது இளமைக் கால இனிய அனுபவங்களைப் பற்றியும் நாம் சிந்திப்பதற்கு இடமேயில்லை. அமெரிக்காவின் இந்தப் பிரேரணையின் பின் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு ஓர் பதட்டம் ஏற்பட்டு 15 வயதிற்குக் குறைந்த சிறுவர்களை வேலைநீக்கம் செய்துள்ளனர். பங்களாதேஷில் புடவைக் கம்பனிகளில் வேலை செய்பவர்களில் 18 வயதிற்குக் குறைந்தவர்கள் 150,000 பேராகும். அதில் 15 வயதிற்குக் குறைந்தவர்கள் 50,000 ஆகும். உதாரணமாக தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர் தன்னிடம் வேலைசெய்த 350 தொழிலாளர்களில் 300 பேரை வேலைநீக்கம் செய்துவிட்டதாகக் கூறுகிறார்.

## வறுமையில் வாடும் குடும்பங்களே பலி!

அமெரிக்காவின் இச்சட்டத்தைப் பிள்ளைகளின் பெற்றோரோ, அல்லது முற்போக்குத் தொழிற்சங்கங்களோ யாருமே ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அவர்கள் ஆத்திரமான கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். இச்சட்டம் வேலைசெய்யும் நிலைமையை முன்னேற்றுவற்கு மாறாக அமெரிக்க நலனையே பாதுகாக்கும் எனவும் கூறுகிறார்கள். "பங்களாதேஷ் தொழில் மயமாக்கப் படுவதைத் தடுப்பதற்கான ஓர் சதித்திட்டம் இதுவாகும்" என தொழிற்சங்கம் கூறுகிறது.

முதாலாவதாக இது ஓர் பரிதாபத்துக்குரிய நிலையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிராமப்புறங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்து டாக்காவில் சேரிகளில் வாழும் வறிய குடும்பங்கள், தமது குடும்ப வருமானத்திற்கு தமது சிறார்களிலேயே தங்கியிருக்கிறார்கள். உதாரணமாக டாக்காவில் சேரியில் வாழும் 14 வயதுச் சிறுமி தனது தந்தையார் இறந்தபின் தாம் எவ்வாறு பட்டினியால் வருந்தினோம் என்றும் ஓர் பணக்காரக் குடும்பத்தில் வீட்டு வேலைக்காரியாக வேலைசெய்து அடிமைப்படுவதிலும் பார்க்க புடவைக் கம்பனிகளில் வேலை செய்வதைத் தான் சிறந்ததாகக் கருதுவதாகவும் கூறுகிறார்.

இரண்டாவதாக பங்களாதேஷ் பத்திரிகைகள் சிறுவர்களுக்குப் பதிலாக இக்கம்பனிகள் வளர்ந்தவர்களை வேலைக்கமர்த்தினாலும் அதனால் கம்பனி உரிமையாளர்களுக்கு மேலதிக செலவீனங்கள் எதுவும் ஏற்படுவதில்லை என்று கூறுகின்றன. ஆனால் அவர்கள் திறமையாக வேலைசெய்வதற்கு சில நாட்களுக்கு அவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும்; இதனால் ஓர் குறுகிய காலத்திற்கு சில அசௌகரியங்கள் ஏற்படும்; அவ்வளவுதான்-என்று கூறுகிறது.

## மேற்கின் சுரண்டல்

இந்த அமெரிக்க சட்டம் மேற்கின் கபட நாடகத்தின், ஓர் தெளிவான வெளிப்பாடாகும். அமெரிக்காவின் தலைமையில் மேற்குநாடுகள் பங்களாதேஷின் புடவைக் கம்பனிகளிலிருந்து அயோக்கியத்தனமான வழிகளில் பெரும் லாபத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். அந்நாடு உதவி வழங்கும் நாடுகளுக்கு 17 பில்லியன் டாலர் கடன்பட்டுள்ளது. அதேநேரத்தில் உதவி வழங்கும் நாடுகள் ஒவ்வொரு வருடமும் 1.5 பில்லியன் டொலர் அபிவிருத்தி நிதியாக வழங்குகிறார்கள். இக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக உலக வங்கி, I.M.F போன்ற அமைப்புக்கள் "ஏற்றுமதி நோக்குடைய ஓர் பொருளாதார திட்டத்தை அமைக்கும்படி பங்களாதேஷை வற்புறுத்தி வருகிறார்கள். இந்த அடிப்படையில் வெளிநாட்டால் திணிக்கப்பட்ட "உற்பத்தி வடிவம்" தொழில் மயமாக்கப்பட்ட மேற்கு நாடுகளுக்கு புடவைகளை ஏற்றுமதி செய்யும் பங்களாதேஷிற்கு ஏற்றதாகக் கூறப்படுகிறது. இதன் விளைவாக புடவைப்பகுதி முக்கிய ஏற்றுமதிப் பகுதியாக வளர்ந்துள்ளது. இதனால் அவர்கள் தமது கடனுக்கான கடமைகளை வேறுசில மூன்றாம் உலகநாடுகளிலும் பார்க்க சிறந்தமுறையில் செய்துவருகிறார்கள்.

ஆனால் பங்களாதேஷிற்கு அவர்களது ஏற்றுமதிப் பொருட்களுக்கு மிகக் குறைந்த விலையே கிடைக்கிறது. உதாரணத்திற்கு ஓர் அமெரிக்க கடையில் 30 அல்லது 35 டொலருக்கு விற்கப்படும் ஒரு சேட்டுக்கு பங்களாதேஷ் தொழிற்சாலைக்கு ஆகக் கூடியது 3 டொலரே கிடைக்கின்றது. ஜேர்மனியில் 10 மார்கிற்கு விற்கப்படும் ஓர் பங்களாதேஷ் T சேட்டுக்கு 40 சதமே தொழிற்சாலைக்குக் கிடைக்கிறது. செனட்டர் கார்க்கின் உண்மையிலேயே இரக்கமிருந்திருந்தால், அதிமோசமான வழியில்,

www.tamilarangam.net

அதிகுறைந்த விலையை இப்பொருட்களுக்குக் கொடுப்பதை எதிர்த்துக் குரல் கொடுத்திருப்பார்.

சுருங்கக் கூறின் சிறுவர்களின் வேலைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய இச்சட்டம், அமெரிக்க உள்நாட்டுச் சந்தையை அதிகுறைந்த விலைக்கு இறக்குமதி செய்வதிலிருந்து பாதுகாக்கும் மறைமுக வழியாகும். இதற்கு முன்பு பங்களாதேஷிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களை ஓர் கட்டுப்பாட்டில் வைப்பதற்காக ஒரு கோட்டா முறையை உருவாக்குவதற்கு அமெரிக்கா முயற்சித்தது. ஆனால் இம்முயற்சி அமெரிக்கா வெகுவாக இலட்சிய மயமானதாகப் பிரகடனப்படுத்தும் "தாராளவர்த்தகக்" கொள்கைக்கு நேரடியாகவே முரண்பாடு கொண்டதாகும்.

பீட்டர் கஸ்டஸ்

---

## அகதி

சந்தா :1வருடம்(தபாற் செலவு உட்பட)

| | | |
|---|---|---|
| | - | f 15,- |
| நெதர்லாந்து | - | f 20,- |
| ஐரோப்பா | - | 12$ |
| ஆசியா | - | 12$ |
| அமெரிக்கா | - | 12$ |
| அவுஸ்திரேலியா | - | |

வங்கி கணக்கு: 12 75 43 171

Rabobank,Odijk,Nederland.

www.tamilarangam.net




# மறையாத மறுபாதி

புகலிடத்துப் பெண்கள் கவிதைத் தொகுப்பு

**வெளியீடு:**

EXIL
27,RUE JEAN MOULIN
924000 COURBEVOIE
FRANCE



# அதிகாலையைத் தேடி..!

கவிதைத் தொகுப்பு

**செழியன்**

**வெளியீடு:**

KALAM VELIIYIEDU
3000,Victoria park Ave., 438
North York, Ont., Canada




# கோசல்யா கவிதைகள்

**வெளியீடு:**

NOOL
Nadarajah Sussindran Straube
Brunsbuetteler Damm 21
1000 Berlin 20
Germany



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்